14.01.2025 - செவ்வாய்க்கிழமை

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්

விலை ரூபா 40

ஆண்டு: 01 இதழ் : 69 குரோதி வருடம் மார்கழி மாதம் 30 ஆம் நாள் - ஹிஜ்ரி 1446 ரஜப் 14 பக்கங்கள் - 12

## சுங்க விடுவிப்பை விரைவுபடுத்த வாரத்தில் ஏழு நாட்களும் பணி

சுங்கத்துறை விடுவிப்பு செயல்முறையை விரைவுபடுத்துவதற்காக இலங்கை சுங்க அதிகாரிகள் வாரத்தில் ஏழு நாட்களும் பணியாற்றுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சுங்கம் மற்றும் துறைமுகங்கள் தொடர்பான சேவைகளை வழங்கும் சங்கங்களுக்கும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கும்

02 →






இனிய தைபொங்கல் நல் வாழ்த்துகள்

# சீனா சென்றார் ஜனாதிபதி; வலுப்பெறும் இருதரப்பு உறவு

## ● உற்று நோக்கும் இந்தியா



**(ஆர். மனோசங்கர்)**

சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கின் அழைப்பின் பேரில் நான்கு நாள் உத்தியோகபூர்வ பயணமாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நேற்று திங்கட்கிழமை இரவு சீனா சென்றார்.

இன்று 14ஆம் திகதி முதல் எதிர்வரும் 17ஆம் திகதி வரை ஜனாதிபதி சீனாவில் தங்கியிருப்பார்.

இந்தக் காலப்பகுதியில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங், சீன பிரதமர் லி கியாங் மற்றும் பிற அரசாங்க அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களில் ஈடுபடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தொழில்நுட்பம் மற்றும் விவசாய மேம்பாடு மற்றும் வறுமை ஒழிப்பு ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட பல களப் பயணங்களிலும்

02 →

## போப் பிரான்சிஸுக்கு அமெரிக்காவின் உயர் விருது



அமெரிக்க ஜனாதிபதியின் மிக உயரிய "மெடல் ஆப் பிரீடம்" விருது பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸுக்கு வழங்கப்பட்டது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற குடியரசு கட்சியின் டொனால்ட் ட்ரம்ப் எதிர்வரும் 20ஆம் திகதி அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ளார். பதவிக் காலம் முடிவடையும் ஜனாதிபதி ஜோ பைடன் விழாவில் கலந்துகொண்டு அதிகாரத்தை அவரிடம் ஒப்படைக்கிறார். இதற்கிடையே, ஜனாதிபதி பதவியில் ஒரு வார காலம் மீதமுள்ள

02 →

## ஐரோப்பிய ஒன்றியம் உக்ரேனுக்கு 140 மில். யூரோக்கள் நிதியுதவி



உக்ரேனுக்கு 140 மில்லியன் யூரோக்கள் மற்றும் மால்டோவாவுக்கு மேலும் 8 மில்லியன் யூரோக்கள் மதிப்பிலான புதிய மனிதாபிமான உதவிகளை ஐரோப்பிய ஒன்றியம் நேற்று திங்கட்கிழமையன்று அறிவித்தது.

நெருக்கடி மேலாண்மைக்கு பொறுப்பான ஐரோப்பிய ஆணையர் ஹட்ஜா லஹ்பிப், ரஷ்ய நாட்டுடனான போர் தொடர்வதால் மனிதாபிமான சவால்கள் குறித்து விவாதிக்க உக்ரேனுக்கு விஜயம் செய்த காரணத்தால் இந்த

02 →

## அரச மருத்துவமனைகளுக்கு கிடைத்த ரூ.920 மில்லியனுக்கு என்ன நடந்தது?

### கணக்காய்வு அலுவலக அறிக்கையால் அதிர்ச்சி

மஹரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கும் கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கும் கிடைத்திருந்த ஆயிரம் மில்லியன் ரூபா நன்கொடையில் 920 மில்லியன் ரூபா பயன்படுத்தப்படவில்லை என தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, சுகாதார அமைச்சின் தேசிய அபிவிருத்தி அறக்கட்டளைக்கு 13 மில்லியன் ரூபாவும், பொரளை ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு கிட்டத்தட்ட 600 மில்லியன் ரூபாவும், மஹரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு கிட்டத்தட்ட 400 மில்லியன் ரூபாவும் கிடைத்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெறப்பட்ட மொத்தத் தொகையில் 80 மில்லியன் ரூபா மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளதாக

02 →

## நாட்டின் சுபமான ஆரம்பத்திற்கு தைத்திருநாள் ஆசீர்வாதமாகட்டும்



புதிய திசையை நோக்கிச் செல்லல், மனித சமூகத்தின் உள்ளக-வெளிப்புற சகவாழ்வு என்பனவே தைப்பொங்கல் பண்டிகையின் அர்த்தமாகும்.இந்த நாட்டு மக்களின் நற்பண்புகள்,நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு என்பவற்றை மேம்படுத்தி சமூக மாற்றத்திற்கான ஆரம்ப முயற்சியாகவும், சுற்றுச்சூழல் மற்றும் நெறிமுறைக்கான புதிய ஒரு திசையின் தொடக்கமாக "கிளீன் ஸ்ரீலங்கா" திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ள சமயத்தில், தைப் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுவது மகிழ்ச்சியளிக்கிறது

02 →

## 3,500 இலங்கையர்களுக்கு புனித ஹஜ் செல்ல அனுமதி

### ஒப்பந்தம் கைச்சாத்து



புனித ஹஜ் யாத்திரைக்காக இம்முறை 3,500 இலங்கையர்களுக்கு புனித ஹஜ் செல்வதற்காக அனுமதி வழங்குவது தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

சவுதி அரேபியா – ஜெட்டாவில் உள்ள அசிலா விருந்தகத்தில் வைத்து இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதாக புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் அந்த நாட்டின் ஹஜ் யாத்திரைக்கான பிரதியமைச்சர் அப்துல்ஃபட்டா பின் சுலைமான் மஷாட் (Abdulfattah bin Sulaiman Mashat) மற்றும் புத்தசாசன,

02 →

## மாகாண மட்டத்தில் குற்றப் புலனாய்வு பிரிவு

### பொது பாதுகாப்பு அமைச்சர் நடவடிக்கை

மாகாண மட்டத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவுகளை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக பொது பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

தென் மாகாணத்தில் ஏற்கனவே இவ்வாறான பிரிவுகள் இயங்கி வருவதாக தெரிவித்த அமைச்சர் ஆனந்த விஜேபால, தற்போதுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு மேலதிகமாக புதிய பிரிவுகளை அமைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

சில விசாரணைகள் பொலிஸ் மா அதிபரின் மேற்பார்வையில் நேரடியாக

02 →

## பொறுப்புணர்வை வெளிப்படுத்தும் நன்றி பெருவிழாவே தைப்பொங்கல்



பன்முகத்தன்மையில் ஒற்றுமையை ஊக்குவிக்கும் மற்றொரு தேசிய விழாவாக தைப்பொங்கல் விழாவை ஒன்றிணைந்து கொண்டாடுவது நமது கலாசார பாரம்பரியத்தை பாதுகாக்க உதவும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வெளியிட்டுள்ள தைப்பொங்கல் வாழ்த்துச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

02 →

## பாலியல் துன்புறுத்தல்: 03 நாடாளுமன்ற ஊழியர்கள் சேவை இடைநிறுத்தம்

பாலியல் துன்புறுத்தல் குற்றச் சாட்டுகள் தொடர்பாக மூன்று நாடாளுமன்ற ஊழியர்கள் சேவையிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இடைநீக்கம் செய்யப்பட்ட நாடாளுமன்ற ஊழியர்களில் நாடாளுமன்றத்தின் சமையல் மற்றும் சிற்றூழிய பிரிவின் உதவி வீட்டுப் பணியாளரும் அடங்குவர்.சம்பவத்தை விசாரிக்க நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இடைநீக்கம் செய்யப்பட்டதாக நாடாளுமன்ற நிர்வாகம் தெரிவித்துள்ளது.

பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டுகள் ஒகஸ்ட் 2023 இல் பதிவாகியிருந்ததாகவும் முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி

02 →

## அரசாங்கத்தின் முதலாவது பட்ஜட் மீது IMF அதிக அவதானம்

**(கனூஷியா புஷ்பகுமார்)**




அரசாங்கத்தின் முதலாவது பட்ஜட் மீது அதிக அவதானம் செலுத்தப்பட்டு வருகிறது. அதன்படி, சர்வதேச நாணய நிதியம் (IMF) அரசாங்கத்தின் பட்ஜட் எவ்வாறு முன்வைக்கப்படுகிறது என்பதில் அதிக அவதானம் செலுத்தி வருகிறது.

இதேவேளை, அநுரகுமார திஸாநாயக்க அரசாங்கத்தின் முதலாவது பட்ஜட்டில் உள்ளடங்கும் காரணிகளை ஒப்பிட்டு பார்த்த பின்னர் இலங்கைக்கு வழங்கவுள்ள மூன்றாவது கடன் தவணை தொடர்பில் கலந்துரையாடல்கள்

02 →

## கடத்தப்பட்ட கண்டி மாணவி அம்பாறையில் மீட்கப்பட்டார்!

**(முகம்மட் முக்தார்)**

கண்டி – தவுலகல பகுதியில் வேன் ஒன்றில் கடத்திச் செல்லப்பட்ட பாடசாலை மாணவி அம்பாறை பொலிசாரால் நேற்று(13) காலை மீட்கப்பட்டுள்ளார்.

கடத்தப்பட்ட மாணவியும் கடத்திய நபரும் அம்பாறையிலிருந்து கண்டிக்கான சொகுசு பஸ்ஸில் பயணம் செய்ய இருந்த நிலையிலேயே பொலிசார் இருவரையும் கண்டுபிடித்து கைது செய்துள்ளனர்.

கடத்திச் சென்ற மாணவியும் அவரை கடத்திய நபர் பற்றியும் அம்பாறை பொலிசாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள்

02 →

# பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்



பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பில் தற்போதைய அரசாங்கம் இதற்கு முன்னர் நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியேயும் எதிராக கருத்து தெரிவித்து வந்துள்ளதால் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க அல்லது திருத்தங்களை மேற்கொள்ள அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார். இலங்கையில் பயங்கரவாதத்தை ஒழிக்கும் சட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு மற்றும் திருத்த சட்டம் தொடர்பான காரணிகளை அரசாங்கம் முன்வைக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, இந்த சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் அறிக்கையொன்றை முன்வைக்குமாறு கோரிக்கை விடுத்துள்ள எதிர்க்கட்சித் தலைவர், ஏதேனும் ஒரு விதத்தில் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கும் நடவடிக்கைகளை தற்போதைய அரசாங்கம் மேற்கொள்ளவில்லையெனின், அதற்கு எதிராக நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் போராட தயார் எனவும் கூறினார்.

# புத்தளம் காஸிமிய்யா முன்னாள் அதிபர் காலமானார்



புத்தளம் காஸிமிய்யா அரபுக் கல்லூரியின் முன்னாள் அதிபரும், புத்தளம் மாவட்ட ஜம்இயத்துல் உலமா சபை முன்னாள் தலைவருமான அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம் நேற்று திங்கட்கிழமை (13) மாலை காலமானார்.

அன்னார் புத்தளம் நகரில் கல்விக்கு பெரும் பங்களிப்பு செய்த உலமா மஹ்மூத் ஹஸரதின் புதல்வராவார்.

# மண்சரிவு அபாய எச்சரிக்கை

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் நாட்டின் சில பகுதிகளில் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுத்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த எச்சரிக்கை இன்று மாலை 4 மணி வரை அமுலில் இருக்கும் என்று தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, பதுளை மாவட்டத்தில், வெலிமட, பசறை, ஹாலிஎல, பதுளை, கண்டி மாவட்டத்தில் மெததும்பர, பாததும்பர, உடுதும்பர, குருநாகல் மாவட்டத்தில் ரிதீகம, மாத்தளை மாவட்டத்தில் உள்ள ரத்தோட்டை, உக்குவெல, நுவரெலியா மாவட்டத்தில் உள்ள வலப்பனை மற்றும் ஹங்குரான்கெத்த பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

## முதலாம் பக்கத் தொடர்ச்சி...

### பாலியல் துன்புறுத்தல்:...

குசலா சரோஜனி வீரவர்தன தலைமையிலான குழுவினரால் உள்ளக விசாரணை நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புகார்களின் தன்மை மற்றும் சம்பவம் தொடர்பான ஆதாரங்களில் உள்ளக விசாரணை குழு கவனம் செலுத்தியதாகவும் இறுதி பரிந்துரைகள் குற்றம் சாட்டப்பட்ட ஊழியர்களை இடைநீக்கம் செய்ய வழிவகுத்ததாகவும் நாடாளுமன்ற நிர்வாகம் தெரிவித்துள்ளது

### அரசாங்கத்தின் ...

ஆரம்பிக்கப்படும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொண்டுள்ள ஒப்பந்தங்களின் அடிப்படையில் இந்த பட்ஜட் முன்வைக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் உற்று நோக்கி வருகிறது.

மேலும், மூன்றாவது கடன் தவணை வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் அநேகமாக எதிர்வரும் பெப்ரவரி மாதம் இறுதியில் நடைபெறும் என சர்வதேச நாணய நிதியம் தீர்மானித்துள்ளது

### மாகாண மட்டத்தில்...

மேற்கொள்ளப்படும் எனவும், விசாரணைகளை நெறிப்படுத்துவதே இதன் நோக்கமாகும் எனவும் அமைச்சர் ஆனந்த விஜேபால மேலும் தெரிவித்தார்.

### 3,500 இலங்கையர்களுக்கு...

சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹனிதும சுனில் செனவி ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

இதன்போது, புனித ஹஜ் யாத்திரையில் ஈடுபடுபவர்களுக்கான வசதிகள் மற்றும் யாத்திரையில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது.

### சீனா சென்றார்...

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க பங்கேற்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின் போது இரு நாடுகளுக்கும் இடையே பல இருதரப்பு ஒப்பந்தங்களும் கையெழுத்திட திட்டமிடப்பட்டுள்ளன. ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஆட்சிக்கு வந்த பின்னர் மேற்கொள்ளும் இரண்டாவது வெளிநாட்டுப் பயணம் இதுவாகும்.ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் நான்கு நாள் அரசப் பயணம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று சீனா கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்திருந்தது.

“இலங்கை ஜனாதிபதியின் விஜயம், அவர் பதவியேற்ற பின்னர் சீனாவிற்கு மேற்கொள்ளும் முதல் விஜயமாகும், மேலும் இது சீன-இலங்கை உறவுகளின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.” என்று சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் குவோ ஜியாகுன் ஊடக சந்திப்பில் கூறியிருந்தார்.

இலங்கை ஜனாதிபதியின் விஜயத்தின் போது சீன ”ஆராய்ச்சிக் கப்பல்களை” அனுமதிப்பது, இலங்கையின் மிகப்பெரிய கடன் வழங்குநராகக் கூறப்படும் சீனாவிற்கான இலங்கையின் கடன் உறுதிப்பாடுகள், பெல்ட் அண்ட் ரோடு முன்முயற்சி (BRI) மற்றும் முதலீடுகளை விரிவுபடுத்துதல் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து பேசப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சீன சார்பு தலைவர் மகிந்த ராஜபக்ச, அவரது சகோதரர் கோத்தாபய ராஜபக்ச மற்றும் ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் ஆட்சி காலத்தில் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருட குத்தகைக்கு கையகப்படுத்தியதன் மூலம் இலங்கையுடனான தனது மூலோபாய உறவுகளை சீனா விரிவுபடுத்தியுள்ளது.

அதேநேரத்தில், கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தை மேம்படுத்துவதன் மூலமும், கடன் பரிமாற்றமாக ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருட குத்தகைக்கு கையகப்படுத்தியதன் மூலமும் தீவு தேசத்தின் புதிய யதார்த்தங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் புதிய தலைமுறைத் தலைவராக ஜனாதிபதி அநுரகுமார உள்ளார்.

கடுமையான பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர், இலங்கை தனது வெளிநாட்டு கடனை மீளச் செலுத்துவதை நிறுத்தியிருந்தது. இலங்கையின் மொத்த வெளிநாட்டு கடனில் அதிக விகிதத்தை சீனாவே வழங்கியுள்ளது.

அதேநேரத்தில் அந்நியச் செலாவணி நெருக்கடியுடன் போராடி தீவு தேசத்திற்கு, இந்தியா சுமார் நான்கு பில்லியன் அமெரிக்க டொலருடன் உதவ முன்வந்திருந்தது. இதனால் நாடு மெதுவாக மீட்சி அடைந்ததுடன் பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) பிணை எடுப்புப் பொதிக்கு தகுதி பெறவும் உதவியது.

பொருளாதார நெருக்கடியின் போது, சீனா உணவு பொருட்களை அனுப்பி இலங்கைக்கு உதவியது. ஆனால் பண உதவியை வழங்குவதற்கான இலங்கையின் கோரிக்கைகளுக்கும் கடன் மறுசீரமைப்புக்கான அழைப்புகளுக்கும் பதிலளிப்பதைத் தவிர்த்து வந்திருந்தது.

நீடித்த பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு, சீனா சமீபத்தில் இலங்கையுடன் அதன் 4.2 பில்லியன் அமெரிக்க டொலர் கடனை மறுசீரமைக்க ஒரு ஒப்பந்தத்தை எட்டியுள்ளது.பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி என்பன ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை இலங்கை அரசியலில் மிகப் பெரிய இடத்திற்கு அழைத்துச் சென்றிருந்தது.

இதனால், கடந்த ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு (NPP) மகத்தான வெற்றி கிடைத்திருந்தது.

முன்னதாக, கடந்த டிசம்பர் மாதம் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பின் பேரில் இந்தியா சென்றிருந்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சீனாவைப் பற்றி வெளிப்படையாகக் குறிப்பிடும் வகையில், தீவு தேசத்தை ”இந்தியாவின் நலனுக்கு தீங்கு விளைவிக்கும் வகையில்” பயன்படுத்த ஒரு போதும் அனுமதிக்க போவதில்லை என அழுத்தமாக குறிப்பிட்டிருந்தார்.

”இந்தியாவுடனான தொடர்ச்சியான ஒத்துழைப்பை ஆழப்படுத்துவதற்கு இலங்கை மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது” என்றும் ஜனாதிபதி அநுரகுமார குறிப்பிட்டிருந்தார்.சீன ஆராய்ச்சிக் கப்பல்கள் இலங்கை கடற்பரப்பிற்குள் அடிக்கடி வருகை தருவது குறித்து இந்தியா வெளிப்படுத்திய கவலைகளின் பின்னணியில் ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு வெளியாகியிருந்தது.

எவ்வாறாயினும், இந்தியா வெளிப்படுத்திய கவலைகளை அடுத்து, இலங்கை தனது துறைமுகங்களுக்கு வருகை தரும் வெளிநாட்டு ஆராய்ச்சிக் கப்பல்களுக்கு விதித்திருந்த ஒரு வருட தடையை கடந்த மாதம் முடிவுக்கு கொண்டுவந்திருந்தது.

இதனையடுத்து இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய ஜனாதிபதி அநுரகுமாரவை சீன மக்கள் அரசியல் ஆலோசனை மாநாட்டின் (CPPCC) தேசியக் குழுவின் துணைத் தலைவரான மூத்த சீன அதிகாரி சின் போயோங் அவசரமாக சந்தித்திருந்தார்.

இதன்போது “பல்வேறு காரணங்களுக்காக தற்காலிகமாக நிறுத்தப்பட்ட கடல்சார் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மீண்டும் தொடங்குவதற்கான திட்டங்கள் இருப்பதாக” குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறான பின்னணியிலேயே ஜனாதிபதி அநுரகுமாரவின் சீன விஜயம் அமைந்துள்ளது என்பதுடன், அவரின் சீன விஜயத்தை இந்தியா உன்னிப்பாக அவதானித்துள்ளது

### சுங்க விடுவிப்பை...

இடையில் (12) ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இந்த உடன்பாடு எட்டப்பட்டது.

இறக்குமதி செய்யப்படும் கொள்கலன்களின் சுங்கத்துறை விடுவிப்பில் ஏற்படும் தாமதத்தை அடுத்த நான்கு நாட்களுக்குள் முடிவுக்குக் கொண்டுவர தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். இலங்கை சுங்கம் உட்பட அரசதுறையில் நிலவும் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்த ஜனாதிபதி , துறைமுகம் தொடர்பான சேவைகளை வழங்கும் சங்கங்களின் பிரச்சினைகள் குறித்தும் விரிவாக ஆராய்ந்தார்.

இதன் போது துறைமுக துறையை அபிவிருத்தி செய்வதற்கான குறுகிய கால மற்றும் மத்திய கால மற்றும் நீண்ட கால திட்டங்களைச் செயற்படுத்துவது அவசியமான போதும் தற்பொழுது எழுந்துள்ள சூழ்நிலையைத் தீர்க்க,அனைவரும் இணைந்து செயற்படுவதன் அவசியம் சுட்டிக்காட்டப்பட்டது.

தற்பொழுது எழுந்த சூழ்நிலையைத் தீர்க்க, ஜனாதிபதியின் அறிவுறுத்தல்களின்படி, அரச மற்றும் தனியார் துறைகளுக்கு இடையே உடன்பாடு எட்டப்பட்டன.

இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களுக்கு அனுமதி வழங்கும் செயல்பாட்டில் நிலுவையில் உள்ள தேக்கத்தைத் தீர்க்க, இலங்கை சுங்க அதிகாரிகள் வாரத்தில் ஏழு நாட்களும், 24 மணிநேரமும் பணியாற்ற உடன்பாடு தெரிவித்துள்ளனர்

### போப் பிரான்சிஸுக்கு...

நிலையில் கடைசி வெளிநாட்டுப் பயணமாக இத்தாலி செல்ல திட்டமிட்டிருந்தார். ஆனால் கலிபோர்னியா காட்டுத்தீ பேரழிவினால் ஜனாதிபதி பைடனின் இத்தாலி பயணம் இரத்துசெய்யப்பட்டது.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதியின் மிக உயரிய மெடல் ஆப் பிரீடம் விருது பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸுக்கு வழங்கப்பட்டது. ஜனாதிபதி ஜோ பைடன் முதல் முறையாக அந்த உயரிய விருதை வழங்கினார். பாப்பரசர் பிரான்சிஸிடம் தொலைபேசி மூலமான உரையாடலின் போதே பைடன் இந்த விருதை வழங்கினார். அத்துடன் ஏழை மக்களுக்கு சேவையாற்றிய பாப்பரசர் பிரான்சிஸின் அர்ப்பணிப்பை பாராட்டினார். இதுதொடர்பாக, பைடன் எக்ஸ் சமூக வலைத்தளத்தில் வெளியிட்ட செய்தியில், உங்கள் பணிவையும் பண்பையும் வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது. நீங்கள் காட்டும் அன்புக்கு ஈடு இணை இல்லை என பதிவிட்டுள்ளார். அமெரிக்காவின் வளர்ச்சி, பண்புகள், பாதுகாப்பு, உலக அமைதி போன்றவற்றில் சிறந்த பங்காற்றியவர்களுக்கு ஜனாதிபதியின் மெடல் ஆப் பிரீடம் விருது வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது

### நாட்டின் சுபமான...

என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க விடுத்துள்ள தைத்திருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

வரலாற்று ரீதியாக வேரூன்றிய ஆசிய மரபுகளில் மனிதனுக்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையிலான பிணைப்பு பிரிக்க முடியாதது. தைப்பொங்கல் தினத்தால் வெளிப்படுத்தப்படும் அந்த மரபுகள் இந்த திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன எனவும் குறிப்பிடப்பட்டுள்ள அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தைப்பொங்கல் கொண்டாட்டம் மக்களின் கலாசார வாழ்வில் புதிய நம்பிக்கைகளை கட்டியெழுப்புகிறது. நாட்டில் உருவாகியுள்ள புதிய உத்வேகத்துடன், இலங்கையர்களாகிய நம் அனைவருக்கும், ”அழகான வாழ்க்கை” என்ற நம்பிக்கையை நம் இதயங்களில் சுமந்து, புத்தாண்டில் புதிய உற்சாகத்துடன் முன்னோக்கிக் கொண்டு செல்லும் வாய்ப்பு கிடைத்துள்ளது. அதற்காக சுற்றுச்சூழல் முன்னேற்றத்திற்கு உகந்த முன்னுரிமை அளிக்கும் ஒரு புதிய கலாசார நெறிமுறை இருப்பை உருவாக்குவதன் மூலம் நிலையான அமைதி, நல்லிணக்கம் என்பவற்றை மேம்படுத்துவதற்குத் தேவையான கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் தலைமை பொறுப்பு மற்றும் பொறுப்புக்கூறலை நாங்கள் ஏற்கிறோம்.

நாட்டிற்கும் மக்களுக்கும் பல நல்ல விடயங்களை நிறைவேற்ற உறுதிபூண்டு, நாட்டின் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நாங்கள், அந்த வாக்குறுதிகளை தடைகளுக்கு மத்தியிலும் பின்வாங்காத துணிச்சலுடனும் அசைக்க முடியாத உறுதியுடனும் நிறைவேற்ற உறுதிபூண்டுள்ளோம். இந்த நாட்டு மக்களின் முகங்களில் நீடித்த புன்னகையைக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்ட இந்த செயற்பாட்டில், புதிய அணுகுமுறைகளுடன், ஒற்றுமையுடனும் பங்கேற்புடனும் ஒன்றிணைய உங்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறேன். சுபமான ஆரம்பத்திற்கு இந்தப் பொங்கல் கொண்டாட்டம் பாரிய ஆசீர்வாதமாக அமைய வேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன்.

இலங்கை மற்றும் உலகளாவிய இந்து பக்தர்கள் அனைவருக்கும் நல்லிணக்கம் மற்றும் நன்றியுணர்வு நிறைந்த, வளமான மற்றும் மகிழ்ச்சியான தைப்பொங்கல் திருநாள் நல்வாழ்த்துக்கள்!என தெரிவிக்கப்பட்டுள்ளது

### பொறுப்புணர்வை...

தைப்பொங்கல் என்கிற அறுவடைத் திருவிழா உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்களால் கொண்டாடப்படும் கலாசார முக்கியத்துவம் வாய்ந்த விழாவாகும். மரபு ரீதியாக அறுவடைக் காலத்தில் கொண்டாடப்படும் இந்த விழா நன்றியுணர்வு மற்றும் செழிப்புடன் தொடர்புடையது. தைப்பொங்கலின் உண்மையான பொருளை புரிந்துகொள்வது மிகவும் முக்கியமானது.

விவசாய வாழ்க்கை முறையில், ஒருவரின் பொருளாதாரத்தையும் வாழ்க்கையையும் வலுப்படுத்தி, பயிர்களை செழிப்பாக்க உதவிய சூரியன், மழை, இயற்கை மற்றும் கால்நடைகளுக்கு நன்றி தெரிவிக்கப்படுகிறது. இதன் மூலம், நன்றி செலுத்துதல் என்ற பெரிய பாடம் கற்பிக்கப்படுகிறது, இதனை எதிர்கால சமுதாயத்தில் முறையாக உள்வாங்குவது நமது பொறுப்பாகும்.

ஒரு நாட்டின் மக்களுக்கான பொறுப்பை ஏற்றுள்ள ஆளும் கட்சிக்கு, பொதுமக்களின் பொறுப்புகளை நிறைவேற்றுவது என்பது, அந்த அதிகாரத்தை வழங்கிய மக்களுக்கு செலுத்தப்படும் நன்றி மற்றும் பொறுப்புணர்வின் வெளிப்பாடாகும் என்பதை தைப்பொங்கல் விழாவின் உட்பொருளை சரியாக புரிந்துகொள்வதன் மூலம் உணரலாம்.

ஆரம்பத்தில் விவசாய சமூகத்திற்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்த இந்த விழா, இன்று இன, மத வேறுபாடுகளைக் கடந்து அனைத்து தமிழ் மக்களின் தேசிய விழாவாக மாறியுள்ளது.

பல்மத, பல்லின, பல்மொழி சமூகம் கொண்ட நமது தாய்நாட்டில், பன்முகத்தன்மையில் ஒற்றுமையை ஊக்குவிக்கும் மற்றொரு தேசிய விழாவாக தைப்பொங்கல் விழாவை ஒன்றிணைந்து கொண்டாடுவது நமது கலாசார பாரம்பரியத்தை பாதுகாக்க உதவும்.

ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட தைப்பொங்கல் விழாவை கொண்டாடும் இலங்கை வாழ் சகோதர சகோதரிகளுக்கு பெரும் மகிழ்ச்சியுடன் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்!என தெரிவிக்கப்பட்டுள்ளது

### கடத்தப்பட்ட கண்டி...

மூலம் பல தகவல்கள் வெளியாகியுள்ளன.

சனிக்கிழமை (11) நடந்த இக் கடத்தலின் முக்கிய சந்தேகநபர், மாணவியின் தந்தையின் சகோதரி ஒருவரின் மகன் எனத் தகவல் வெளியாகியுள்ளதாகக் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த மாணவிக்கும் சந்தேகநபருக்கும் இடையில் திருமணம் செய்ய இரு தரப்பினரும் ஆரம்பத்தில் சம்மதம் தெரிவித்ததாகவும், ஆனால் பின்னர் மாணவியின் தந்தை மறுத்ததாகவும் கூறப்படுகிறது.

இதனால் ஏற்பட்ட பிரச்சனைக்குரிய சூழ்நிலை காரணமாகவே சந்தேகநபர் மாணவியை கடத்திச் சென்றுள்ளமை பொலிஸார் முன்னெடுத்துள்ள விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

தவுலகல, ஹன்தெஸ்ஸ பகுதியில் குறித்த மாணவி தற்காலிகமாக வசித்து வந்த நிலையில், தனது தோழியுடன் பாடசாலைக்கு சென்று கொண்டிருந்த போது கடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய வேன் நேற்று முன்தினம் பொலன்னறுவை பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் பொலன்னறுவை பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டது.கம்பளை பகுதியில் வைத்து, குறித்த வேனின் சாரதி தவுலகல பொலிஸ் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். சந்தேகத்திற்குரிய வேனின் சாரதி, கம்பளை, கஹடபிட்டிய பகுதியை சேர்ந்த 30 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

இதேவேளை, 19 வயதான மாணவியைக் கடத்திச் சென்ற சந்தேகநபரான இளைஞன், முதலில் 5 மில்லியன் ஷரூபாயை கப்பமாக கோரியதாக பொலிசாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

மாணவியின் பெற்றார் அம்பாறை பொலிசுக்கு அழைக்கப்பட்டு மாணவி கையளிக்கப்பட்டுள்ளார். மாணவியை கடத்திய நபர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்

### ஐரோப்பிய ஒன்றியம்...

உதவித் தொகை அறிவிக்கப்பட்டது. உக்ரேனின் மக்கள்தொகைக்கு ஏற்ப உணவு, தங்குமிடம், சுத்தமான நீர் என்பனவற்றை பெற்றுக்கொடுக்கும் வகையில் இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

”மனிதாபிமான ஆதரவிலான 148 மில்லியன் யூரோக்கள் புதிய நிதி, உக்ரேனியர்களின் தேவையின் போது நாங்கள் அவர்களுடன் நிற்கிறோம் என்பதற்கு மிகவும் சக்திவாய்ந்த சான்றாகும். இந்த நெருக்கடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உக்ரேனிய அதிகாரிகளுடன் இணைந்து எங்களால் முடிந்த உதவி அனைத்தையும் செய்வோம். ” என லஹ்பீப் ஒரு அறிக்கையில் தெரிவித்தார்

### அரச மருத்துவமனைகளுக்கு...

கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளதுடன், எஞ்சிய பணம் என்ன காரணத்தின் அடிப்படையில் பயன்படுத்தப்படவில்லை என்பதும் அல்லது பணம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதா என்பதும் கேள்விக்குறியாக உள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி கணக்காய்வு அறிக்கை குறித்து கருத்து தெரிவித்துள்ள விசேட மருத்துவ நிபுணர் வைத்தியர் சமல் சஞ்சீவ, இலங்கையில் மருத்துவ கட்டமைப்பு பாரிய நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இந்த தருணத்தில் நன்கொடையாளர்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற பணத்தை நாட்டின் மருத்துவத்துறையின் வளர்ச்சிக்கு பயன்படுத்தாமல் இருப்பது பாரிய நிர்வாக பலவீனம் என்பதால் இது தொடர்பாக விசாரணை நடத்தி பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளை சட்டத்தின் முன் நிறுத்துமாறு சுகாதார அமைச்சரிடம் கோரிக்கை விடுப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்

# மருத்துவத்துறை மோசடிகளை தீர்ப்பதற்கு முன்வரும் ஊழியர்களை பாதுகாப்போம்



## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

மருத்துவத்துறையில் உள்ள பிரச்சினைகள், மோசடிகள் மற்றும் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கும் சரிசெய்வதற்கும் அர்ப்பணிப்புடன் செயல்படும் அனைத்து ஊழியர்களையும் ஊக்குவித்து பாதுகாப்பேன் என்று சுகாதார அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நாரஹேன்பிட்டியில் உள்ள 'மெஹெவர பியச' அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்ட சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மருத்துவத்துறை இன்று உலகில் அதிக இலாபம் ஈட்டும் தொழிலாகவும், பெரும் மோசடியாகவும் மாறிவிட்டது என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அங்கு சென்ற அவர், நிறுவனத்தின் செயல்பாடுகளை மிகவும் முறையாகவும் வெளிப்படையாகவும் முன்னெடுக்க நிர்வாக அதிகாரியுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

மருந்து விநியோக வலையமைப்பு மற்றும் அதன் தற்போதைய செயல்பாடு, மருந்து கொள்முதல் செயல்முறை மற்றும் மருந்து விநியோக வலையமைப்பு மற்றும் எதிர்காலத்தில் இந்த நடவடிக்கைகள் எவ்வாறு முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது குறித்து சுகாதார அமைச்சர் நிர்வாக அதிகாரிக்கு அறிவுறுத்தல்களை வழங்கினார்.

# வளமான நாட்டிற்கும் அதன் மூலம் அழகான வாழ்க்கைக்கும் வித்திடுவோம்

## பிரதி அமைச்சர் பிரதீப் வாழ்த்து



மலர்ந்துள்ள இந்த தைத்திரு நாளில் வலிகள் நீங்கி வளமான நாட்டிற்கும் அதன் மூலம் அழகான வாழ்க்கைக்கு வித்திடுவோம் என பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தனது தைத்திருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச்செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தேசிய மக்கள் சக்தியின் பிரதான நோக்கம் எமது தாய் நாட்டில் கடந்த காலங்களில் அதிகம் முக்கியத்துவம் கொடுக்காத விவசாயத் துறையினை மேம்படுத்தி அதற்கான முன்னுரிமையினை வழங்கி மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதாகும்.

அந்த வகையில் 2025 ஆம் ஆண்டு தைத்திருநாள் இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும் சௌபாக்கியம் நிறைந்த ஆண்டாக மலர்ந்துள்ள இந்த தைத்திருநாளை, நம்பிக்கையோடு எதிர்கொண்டு வலிகள் நீங்கி வளமான நாட்டிற்கும் அதன் மூலம் அழகான வாழ்க்கைக்கு வித்திடுவோம்.

உலகம் போற்றும் நன்னாளான தைத்திருநாளை கொண்டாடும் உலக வாழ் அனைத்து தமிழர்களுக்கும் இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள், என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தங்கத்திற்கான வரி அதிகரிப்பால் நகை விற்பனை பாரியளவில் வீழ்ச்சி

## வரி குறைப்பை செய்யுமாறு நகை வர்த்தகர்கள் கோரிக்கை

நகைத் தொழில்துறைக்கு விதிக்கப்பட்டுள்ள அதிக வரி காரணமாக, ஆபரணங்களின் விலை பெருமளவில் அதிகரித்துள்ளதால், நகை விற்பனை சடுதியாக குறைந்துள்ளதாக, நகை வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னைய அரசாங்கம் நகை வர்த்தகத்திற்கு 18% 'வெற்' வரியை விதித்திருந்ததுடன், சமூக பாதுகாப்பு வரி என 2.5% வரியையும் அறவிட்டதன் காரணமாக தற்போது நகைகளின் விலை 20% உயர்ந்துள்ளதாக நகை வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். அதன்படி, தற்போதைய விலைகளின்படி, ஒரு பவுண் தங்கத்தின் விலை சுமார் இரண்டு இலட்சம் ரூபாயாக உள்ளதுடன், அதனுடன் வரியை சேர்க்கும் போது, ஒரு பவுண் தங்கத்தின் விலை மேலும் 42,000 ரூபாவால் அதிகரிக்கின்றது எனவும் நகை வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

திருமணம், பூப்புனித நீராட்டு விழா போன்ற தவிர்க்க முடியாத வைபவங்களுக்குக் கூட மக்களால் நகைகளை வாங்க முடியாத நிலையே நிலவுவதாகவும், ஒரு சிறு குழந்தைக்கு பஞ்சாயுத மொன்றை வாங்குவதற்கு கூட சுமார் 50,000 ரூபாய் தேவைப்படுவதுடன், இது ஒரு சராசரி குடும்பத்திற்கு கட்டுப்படியாகாது எனவும் குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை, இந்தியாவில் 3.5% என்ற மிகக் குறைந்த 'வெற்' விகிதமே அறவிடப்படுவதாகவும் நகை விற்பனையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர் எனவே, நகை தொழிலில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் மற்றும் நுகர்வோரையும் பாதுகாக்கும் நோக்கில் எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் நியாயமான வரி விகிதத்தை அறிமுகப்படுத்தி நகைத்தொழிலையும், அதில் ஈடுபடுபவர்களையும், நகை நுகர்வோரையும் பாதுகாக்குமாறு இலங்கையிலுள்ள அனைத்து நகை வியாபாரிகளும் அரசாங்கத்திடம் வலியுறுத்துவதாக தெரிவித்துள்ளனர்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் மார்கழி மாதம் 28ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை

**மேஷம்** இன்று எடுக்கும் புதிய முயற்சிகள் வெற்றியை அளிக்கும்.

**ரிஷபம்** உணர்ச்சிவசப்படுதலைத் தவிர்க்க வேண்டும்.

**மிதுனம்** செயல்களை ஊக்கத்துடன் செய்தால் சிறந்த பலன்கள்.

**கடகம்** முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

**சிம்மம்** உங்களுக்கு சிறந்த வாய்ப்புகள் கிடைக்கும்.

**கன்னி** இன்று செயல்களில் மும்மரமாக இருப்பீர்கள்.

**துலாம்** முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

**விருச்சிகம்** அமைதியாக இருந்து எதையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள்.

**தனுசு** முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம்.

**மகரம்** ஆன்மீக ஈடுபாடு மன ஆறுதலையும் தரும்.

**கும்பம்** பதட்டப்பட வேண்டாம். முக்கிய மான முடிவுகளை தவிர்க்கவும்.

**மீனம்** எந்த சூழ்நிலையிலும் நம்பிக்கை இழக்காதீர்கள்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** பின்னிரவு 4.29
**நட்சத்திரம்:** புனர்பூசம் மு.ப 11.24 வரை.
**யோகம்:** சித்தம்.
**சந்திராஷ்டமம்:** கோட்டை, மூலம்
**சூலம்:** வடக்கு.
**இராகு காலம்:** 8.34 AM முதல் 05:04 PM வரை.
**குளிகை:** 12:34 PM முதல் 02:04 PM வரை.
**எமகண்டம்:** 9:34 முதல் 11:04 வரை.



# ஜப்பானின் தென் பகுதியில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

ஜப்பானின் தெற்கே கியூ பகுதியில் நேற்று மாலை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஒன்று ஏற்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜப்பானின் தெற்கே கியூ பகுதியில் பூமியில் இருந்து 37 கி.மீ. ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் ரிக்டர் அளவுகோலில் 6.9 என பதிவாகியுள்ளதாகவும் ஐரோப்பிய மத்திய தரைக்கடல் நில நடுக்க அறிவியல் நிலையம் தெரிவித் துள்ளது.

இதனைத் தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை யும் விடுக்கப்பட்டதாகவும் இதனால் அந்நாட்டு மக்கள் பீதி அடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# செல்ஃபி எடுத்தவர்கள் மீனவர் பிரச்சினையை பேசவில்லை

## யாழ். மாவட்ட மீனவ சங்கங்களின் சமாசம் கவலை



(பு.கஜிந்தன்)

முதலமைச்சர் ஸ்டாலினுடன் செல்ஃபி எடுக்க முண்டியடித்த இலங்கை எம்.பிகள், மீனவர்களது பிரச்சினையை பேசத் தயங்கியது ஏன் என யாழ். மாவட்ட மீனவ சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத்தின் உப தலைவர் ரட்ணகுமார் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்தியா – தமிழ்நாட்டில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றுக்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், இ.சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ஆ.சுமந்திரன் ஆகியோர் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்தனர்.

இதன்போது இலங்கை மீனவர்களது பிரச்சினைகள் குறித்து பேசாமல் முதலமைச்சருடன் சிரித்துக் கொண்டு வெறுமனே செல்ஃபி எடுத்தமை வருத்தம் அளிப்பதாக உள்ளது என்றார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள சம்மேளனத்தின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை மீனவர்களது பிரச்சினைகள் தொடர்கதையாகவே உள்ளன. இலங்கை மீனவர்களின் வலைகள் மற்றும் தொழில் முதலீடுகள் இந்திய இழுவைப் படகுகளால் அழிக்கப்படுகின்றன. இது இவ்வாறு இருக்கையில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், இந்திய மீனவர்கள் வாழ்வாதாரத்துக்காக மீன்பிடியில் ஈடுபடும்போது இலங்கை கடற்படை கைது செய்வதாக குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான கருத்து பிழையானது என்றுகூட அவர்கள் முதலமைச்சரிடம் சுட்டிக்காட்டவில்லை.

கடந்த வருடம் நடுப்பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் சீறுவாணம் விட்டதுபோல, இந்திய இழுவைமடி தொழிலுக்கு எதிர்ப்பு தெரிவித்து, முல்லைத்தீவு பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் – பருத்தித்துறை நோக்கி ஒரு போராட்டத்தை முன்னெடுத்தனர். மக்களுக்காக இந்த போராட்டத்தை செய்கின்றார்கள். இது வரவேற்கத்தக்க விடயம் என்று அப்போது நாங்களும் சந்தோசப்பட்டோம். ஆனால் நேற்று முன்தினம் முதலமைச்சருடன் சிரித்துக்கொண்டு செல்ஃபி எடுத்ததை பார்க்கும்போது, இலங்கை மீனவர்களது விடயம் நினைவில் கூட இல்லை என்பது போலதான் எமக்கு தெரிகிறது.

இந்த நிகழ்வுக்கு கடற்றொழில் அமைச்சரின் தலைமையில் தான் இந்த குழு சென்றதாக அறியமுடிகிறது. கடற்றொழில் அமைச்சர் கூட மீனவர் பிரச்சினை குறித்து பேசியதாக ஊடகங்களில் செய்திகள் எவையும் வெளிவரவில்லை.

சிலவேளை இது குறித்து முதலமைச்சர் ஸ்டாலினிடம் சொல்வதற்கு உங்களுக்கு பயமிருக்கலாம். ஏனெனில் உங்களில் சிலருக்கு இந்தியாவில் வீடுகள், நிலங்கள் இருக்கலாம். ஆகையால் பிறகு அங்கு போவது உங்களுக்கு பயமாக அல்லது பிரச்சினையாக இருக்கும். ஆனால் வெளியே வந்து அங்குள்ள ஊடகங்களுக்கு என்றாலும் எமது மீனவர்களது வளங்கள் அழிப்பது குறித்து சொல்லுங்கள். எங்களது மீனவர்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதை சொல்லுங்கள். அதை சொல்லிவிட்டு வாருங்கள் என்றார்.

# இறக்குமதியாகும் வாகனங்களுக்கான வரிகள் உயர்வடையும் சாத்தியம்

## இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவிப்பு

(ஆர்.மனோசங்கர்)

வாகனங்களுக்கு விதிக்கப்படும் தற்போதைய இறக்குமதி வரி சுமார் 300 வீதம் ஆகும், எனினும், இந்த எண்ணிக்கை 400 வீதம் அல்லது 500 வீதமாக அதிகரிக்கக் கூடும் என்று இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர் இதனை தெரிவித்துள்ளார்.

வட் (VAT) உட்பட மூன்று வகையான வரிகள் வாகன விலை உயர்வுக்கு காரணமாவதாக சங்கத்தின் தலைவர் பிரசாத் மானேஜ் சுட்டிக்காட்டியுள்ளார்.

வாகனத்தின் மதிப்பு, ஆடம்பர வரி, சுங்க வரி, செலவு, காப்பீடு மற்றும் பண்ட வரி (CIF) மற்றும் தற்போதுள்ள 18 வீத வற் வரி ஆகியவற்றின் அடிப்படையில் சிறப்பு இறக்குமதி வரி உட்பட பல அடுக்கு வரிவிதிப்புகளைக் கணக்கிட்ட பிறகு ஒரு வாகனத்தின் இறுதி விலை தீர்மானிக் கப்படுகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

சமீபத்திய வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வரிகள் அரசாங்கத்தால் விதிக்கப் பட்ட இறுதி வாகன வரியைக் குறிக்கவில்லை என்பதை அவர் தெளிவுபடுத்தினார்.

2020ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக வாகனங்கள் உள்ளிட்ட அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதியை தற்காலிகமாக நிறுத்தி, கட்டுப்பாடுகளை விதிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது.எனினும், சர்வதேச நாணய நிதியத் தின் விரிவான கடன் திட்டம் செயல்படுத்தப்பட்டதாலும், நாட்டின் வெளிநாட்டு இருப்புக்கள் மேம்பட்டதாலும், பொருளாதாரம் ஸ்திரமடைந்ததாலும் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டது.

அதன்படி, கடந்த ஆண்டு செப்டம்பர் 12ஆம் திகதி நடைபெற்ற அரசாங்க அமைச்சரவையின் ஒப்புதலின்படி வாகன இறக்குமதிக்கு மூன்று கட்டங்களாக அனுமதி வழங்கப்பட்டது.இந்த நிலையில், மோட்டார் வாகன இறக்குமதிக்கான புதிய வரி திருத்தங்களை உள்ளடக்கிய ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு கடந்த சனிக்கிழமை (11) முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

இதன் விளைவாக, எரிபொருள் மூலம் இயங்கும் மற்றும் மின்சார வாகனங்களின் இறக்குமதிக்கு விதிக்கப்படும் கலால் வரி, வாகனத்தின் சிலிண்டர் திறன் மற்றும் உற்பத்தி ஆண்டு ஆகியவற்றின் அடிப்படையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், புதிய வாகன இறக்குமதியின் போது விதிக்கப்படும் வரிகள் தொடர்பில் இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் கூறுகையில்:–

– வெகன் ஆர் காரின் வரி, சுமார் ரூ.1.6 மில்லியனாக இருந்தது எனினும் புதிய திருத்தத்தின் மூலம் ரூ.1.8 மில்லியனை தாண்டக்கூடும்.

– மேலும், சுமார் ரூ.2 மில்லியனாக இருந்த விட்ஸ் வகை காரின் இறக்குமதி மீதான வரி சுமார் ரூ.2.4 மில்லியனாக அதிகரிக்கக்கூடும்.

– டொயோட்டா அக்வா, கொரோலா மற்றும் ஆக்சியோ மொடல்களுக்கான வரி முன்னர் ரூ. 5.7 மில்லியனாக இருந்தது, இது சுமார் ரூ. 6.6 மில்லியனாக அதிகரிக்கும் என்றும் வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் கூறுகிறது.

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

## தொலைந்து போன மகிழ்ச்சி இந்த அரசில் கிடைக்குமா?

புதியன புகுதலும் பழையன கழிதலும் - நேற்று போகிப் பண்டிகை கொண்டாடினோம். இன்று தைப்பொங்கல். நாளை பட்டிப்பொங்கல். தொடர்ந்து நான்கு நாட்கள் உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கு கொண்டாட்டம்..

நன்றி மறப்பது நன்றல்ல. இந்த உயரிய தத்துவத்தின் அடிப்படை தான், இன்றைய தமிழர் திருநாள்.

வழி பிறக்கும் என்ற வழமையான நம்பிக்கையோடுதான், இன்றும் கால் பதிக்கிறோம்.

பொங்கல் என்பது உணர்வுகளின் பிரவாகம். இன உணர்வுகளின் பிரவாகம் என்றும் சொல்லலாம். அதனால்தான், இளம் பெண்களைக் கவரக் கூடிய எருதுகளை ஓட விட்டு அவற்றை அடக்கும் ஏறு தழுவுதல் வீர விளையாட்டானது.

பொங்கலின் உணர்ச்சி பிரவாகங்களாக இதனை பார்த்தாலும், நாட்டின் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் வாழ்கின்ற தமிழ் மக்களின் நிலை , துன்பமும் துயரமும் தோய்ந்ததாகவே காணப்படுகின்றது. அரிசி விலையேற்றம் ஒருபுறம். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் அவல நிலையும் அரசியல் கைதிகளின் குடும்பங்களின் துயரங்கள் இன்னொரு புறமுமாக துன்பியல் தொடர்கிறது.

உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து 14 வருடங்கள் பூர்த்தி அடைந்த போதிலும் இந்த மக்களின் வாழ்வியல், முறைப்படுத்தப்படவில்லை. உழவுத் தொழிலை உயிராகக் கொள்வோரும் வாழ்வாதாரம் இன்றித்தான் வாழ்கிறார்கள்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம் வருடக்கணக்காக தொடர்கின்றது. போராட்டத்தில் குதித்திருந்த தாய்மாரில் பல பேர், ஏக்க பெருமூச்சில் உயிரிழந்தும் விட்டனர். ஆனாலும், நீதி கோரி இன்னும் போராட்டம் தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது. ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் எல்லாம், ஏதோ எல்லாம் கூறி, சமாளிப்பதற்கு முயற்சி செய்தார்களே ஒழிய, உறவுகளை இழந்து போராடும் மக்களுக்கு, தீர்வைச் சொன்னதாக இல்லை.

மரணச் சான்றிதழும், நஷ்ட ஈடும் வழங்குவதாக மகிந்தவும் சொன்னார் கோட்டாபயவும் சொன்னார். அதன் பின்பு ஆட்சியைப் பிடித்த ரணில் விக்கிரமசிங்கவும் அதையேதான் சொன்னார்.

இலட்சக்கணக்கான காசும், சான்றிதழும் பெறுவதல்ல இந்த மக்களின் போராட்டம். இராணுவத்தினால் பிடித்துச் செல்லப்பட்டவர்களுக்கும், இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட இளைஞர்- யுவதிகளுக்கும் என்ன நடந்தது என்பதை அறியும் நீதி போராட்டமே இது என்பதை, ஆட்சி செய்தவர்களும் ஆட்சியில் இருப்பவர்களும் புரிந்து கொள்வதே ஆரோக்கியமான விளைவுகளை உருவாக்கும்.

மகிழ்ச்சியையும் வாழ்வியலையும் தொலைத்து விட்டு, வருடக் கணக்கில் நீதி கோரும் இந்த மக்களுக்கு, எந்தத் தீர்வும் கொடுக்கப்படவில்லை. ஆட்சியில் இருந்தவர்கள் எல்லாம், பொறுப்புக் கூறலில் இருந்து நழுவிச் செல்கிறார்களே தவிர, அவலத்தின் உண்மை நிலையை, எடுத்துச் சொல்கிறார்கள் இல்லை. மாறாக, பாதுகாப்பு தரப்பை இறக்கைகளுக்குள் வைத்து பாதுகாக்கும், நடவடிக்கைகளை செவ்வனே செய்கிறார்கள் என்பது முழுமையான உண்மை.

இந்த நிலை, போராடும் உறவுகளுக்கு ஆறுதல் அளிப்பதாக இல்லை. இவர்களின் துன்பமும் துயரமும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றன.

இதேபோல,, தமிழ் அரசியல் கைதிகளின் நிலை இன்னும் கேட்பாரற்று தான் கிடக்கின்றன. விடுதலைப் புலிகளுக்கு உதவினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில், கைது செய்யப்பட்ட பலரும் இன்னும் சிறைகளில்தான் காலத்தை கடத்துகிறார்கள். இளைஞர்களாக இருக்கும்போது கைது செய்யப்பட்டவர்கள் எல்லாம், முதுமையை எட்டி விட்டார்கள். தந்தையை இழந்த நிலையில், குழந்தைகளும் குடும்பமும் படும் வேதனை சொல்லில் அடங்க முடியாதவை. ஒரு ஆயுள் தண்டனை கைதியையும் விட, கூடுதல் காலம் சிறைகளில் வாடும் இந்த தமிழ் அரசியல் கைதிகளின் அவலத்தை, ஆட்சியில் இருந்தவர்கள், அலட்சியம் செய்து விட்டே போனார்கள்.

தமிழ் அரசியல் கைதிகள் என்று எவரும் சிறைகளில் இல்லை என்று சொன்ன அப்போதைய நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ.... பின்னாளில், நீதி விசாரணைக்கு உட்படுத்தி அவர்களை விடுதலை செய்வதாக உறுதி அளித்தார். அதுவும் நடந்ததாக இல்லை.

சிங்கள பௌத்த பேரினவாதிகளின் அழுத்தங்களுக்கு அடிபணிந்த, அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தென்பகுதி சிங்கள மக்களை திருப்தியில் வைத்துக் கொண்டு, ஆட்சியை தக்க வைப்பதிலேயே உறுதியுடன் இருந்தார்கள்.

அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு தமிழ் அரசியல் கட்சிகள் விடுத்த வேண்டுகோளை எல்லாம், புறக்கணித்துவிட்டு, சிங்கள மக்கள் மத்தியிலே , தமிழர்களுக்கு எதிரான பிரசாரமாக மாற்றினார்கள். இதுதான் இந்த நாட்டின் பேரினவாத அரசியல் வெளிப்பாடு.

அநுராதபுரம் சிறையில் இருக்கின்ற தமிழ் அரசியல் கைதிகளை, சிறைக்குள் சென்று துப்பாக்கியால் மிரட்டிய அமைச்சர் ஒருவர், ஆட்சியாளர்களாலேயே பின்னர் காப்பாற்றப்பட்டார். கைதிகளும் மனிதர்களே என்று, சிறைச்சாலை சுவர்களில் எழுதி வைத்திருக்கும் இந்த அரசாங்கம், அரசியல் கைதிகளின் விடயத்தில் மனிதாபிமானத்தை விலை பேசுகிறது.

ஆகவே, மாற்றத்தை செய்வோம் என்று, மக்கள் ஆணையுடன் ஆட்சியில் இருக்கின்ற இந்த அரசாங்கம், காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்திலும், காலம் காலமாக சிறைகளில் இருந்து வருகின்ற தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்திலும் என்ன செய்யப் போகிறது என்பதுதான், தமிழ் மக்களின் பொங்கல் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

முன்னரே கூறியது போல, பொங்கல் என்பது மகிழ்ச்சி பிரவாகம் என்பது தான் உண்மை. ஆகவே, தொலைந்து போன இந்த மகிழ்ச்சியை, அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான இந்த இடதுசாரி அரசு பெற்றுக் கொடுக்குமா...



## சூரிய வழிபாட்டின் மகத்துவம் சொல்லும் தைப்பொங்கல்

சூரியனை வழிபாடு செய்யும் பாரம்பரிய வழக்கம் பண்டைய காலத்திலிருந்தே பின்பற்றப்பட்டு வருகிறது. உடல் ஆரோக்கியத்திற்கும் உளநலத்திற்கும் சூரிய வழிபாடு பெரிதும் உதவுகிறது. கண்கண்ட தெய்வமான சூரிய பகவான் முழுமுதற் கடவுளாகப் போற்றி வணங்கப்படுகிறார். சூரிய வழிபாடு நாள்தோறும் மேற்கொள்ளப்படவேண்டும் என்றபோதிலும், பெரும்பாலான மக்கள் தைப்பொங்கல் நாளில்தான் சூரியபகவானுக்குப் பொங்கிப் படைத்து விழா எடுத்துக் கொண்டாடுகிறார்கள்.

நவக்கிரக நாயகர்களுள் முதன்மையானவர் சூரிய பகவான். உலகம் முழுவதும் உயிர்ப்புடன் இயங்குவதற்கு காரணமான இயற்கை சக்திகள் அனைத்துக்கும் மூலசக்தியாக விளங்குபவர் இவர்தான். சூரியபகவானின் இயக்கம் செம்மையாக அமையப்பெற்றால்தான் உலகிலுள்ள மனிதகுலத்தினதும், அனைத்து ஜீவராசிகளினதும், தாவரங்களினதும் செயற்பாடுகள் குறைவின்றி, திருப்திகரமாகவும், முழுமையாகவும் இருக்கும்.

இத்தகைய பெருமைக்குரிய சூரியபகவானின் இராசி மண்டலப் பிரவேசமே ஒவ்வொரு தமிழ் மாதங்களினதும் உதயமாக அமைகிறது. பன்னிரு இராசிகளில் முதலாவதான "மேடம்" இராசியில் பிரவேசிக்கும்போது சித்திரை மாதம் பிறக்கிறது. அதுபோலவே "மகரம்" இராசியில் பிரவேசிக்கும்போது தைமாதம் பிறக்கிறது. இந்த தைமாதப் பிறப்பு தைப்பொங்கல் திருநாளாக அமைகிறது. இதனை "மகர சங்கராந்தி" என்றும் சொல்வதுண்டு.

தைமாதப் பிறப்பு இன்னொரு வகையிலும் முக்கியத்துவம் பெறுகிறது. பூவுலக மக்களுக்குரிய ஓராண்டு காலம் தேவர்களுக்கு ஒருநாளாக அமைந்துள்ளது. தைமாதம் முதல் ஆனி மாதம் வரையிலான ஆறு மாதகாலம் பகற்பொழுதாகும். இது உத்தராயணம் எனப்படுகிறது. ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரையிலான ஆறுமாத காலம் இரவுப் பொழுதாகும். இது தட்சணாயணம் எனப்படுகிறது. தேவர்களுக்குரிய இரவுப்பொழுது மறைந்து, பகற்பொழுது ஆரம்பமாகும் நாள்தான் தைமாதப் பிறப்பாகும். எனவேதான் இந்நாள் பூவுலக மக்களுக்கும் சிறப்பு வாய்ந்ததாக விளங்குகிறது.

தைப்பொங்கல் இந்து மக்களால் கொண்டாடப்படும் பண்டிகைகளுள் ஒன்று என்பதற்கும் மேலாக, நன்றி மறவாமையின் தனித்துவத்தை எடுத்துக்காட்டும் பெருவிழாவாகவும் சிறப்புப் பெறுகிறது. தமிழர் திருநாள், உழவர் திருநாள் போன்ற பெயர்களிலும் தைப்பொங்கல் பண்டிகையை குறிப்பிடுவது வழக்கம்.

உழவர் பெருமக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு உதவும் விவசாய செயற்பாடுகளின்போது வயல் நிலத்தில் விதைத்து அறுவடைசெய்த நெல்லிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட புத்தரிசியைக் கொண்டு ஒரு நன்றிக்கடனாக சூரியபகவானுக்குப் பொங்கிப் படைத்து தைமாதப் பிறப்பைக் கொண்டாடுவதே தைப்பொங்கல் வரலாற்றின் ஆரம்பமாக அமைந்திருந்தது. இதன் காரணமாகவே உழவர் திருநாள் என்ற பெயரில் அழைக்கப்பட்டு வந்தது. காலப்போக்கில் இது இந்து மக்களுக்குரிய பண்டிகைகளுள் ஒன்றாக மாறியதால், உழவர் பெருமக்கள் மட்டுமல்ல, அனைத்து இந்து மக்களும் தைமாதம் பிறக்கும் நாளில் சூரிய பகவானுக்குப் பொங்கிப் படைத்து வழிபாடு செய்வது வழக்கமாகிவிட்டது.

பொங்கல் சாதமானது சூரியபகவானுக்குரிய நைவேத்தியப் பொருளாக சிறப்புப் பெறுவதுடன், அவரது அருளால் பெற்றதை அவருக்கே நன்றியுடன் நிவேதனம் செய்யப்படுகிறது என்ற உன்னத தத்துவத்தையும் தைப்பொங்கல் திருநாள் எடுத்துச் சொல்கிறது.

இந்து மக்கள் தங்கள் வீட்டு முற்றத்திலேயே பொங்கல் கருமத்தை மேற்கொள்வது பாரம்பரிய நடைமுறையாகும். இன்றைய காலப்பகுதியில் பெரும்பாலானவர்கள் நகரங்களிலுள்ள தொடர்மாடி வீடுகளில் வசித்துவரும் நிலையில், பாரம்பரிய வழக்கங்களை பின்பற்றுவதற்குரிய சூழ்நிலைகள் மற்றும் வசதிகள் என்பன குறைவாகவே உள்ளன. எனினும், கிராமப் பகுதிகளில் இப்போதும் பண்பாட்டுப் பாரம்பரிய நடைமுறைகளுடன் தைப்பொங்கல் கருமங்கள் நடந்தேறி வருவதையும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும். பொங்கல் சாதத்தை அந்த இடத்திலேயே தலைவாழை இலையில் படைத்து, சூரிய பகவானை வழிபாடு செய்யும் நிகழ்வானது ஒரு தெய்வ வழிபாட்டுக்கு சமானமாகவும், உன்னத ஆன்மீக செயற்பாடாகவும் அமைந்துள்ளது.

"தை பிறந்தால் வழி பிறக்கும், தரணி எங்கும் வளம் செழிக்கும்" என்று முன்னோர்கள் சொல்லி வைத்திருப்பதை இந்து மக்கள் பெரிதும் மதித்துப் போற்றி வருகிறார்கள். பலவித நம்பிக்கைகளையும், எதிர்பார்ப்புகளையும் வைத்து தைத்திங்கள் வரவேற்கப்படுவது வழக்கம். திருமணம் முதலான மங்கள நிகழ்வுகள், புதுமனைப் பிரவேசம், புதிய கல்வி நிறுவனங்கள், புதிய விற்பனை நிலையங்கள், பயிர்ச் செய்கை போன்ற கருமங்களின் தொடக்கத்தையும் தை மாதத்தில் மேற்கொள்வதையே பெரிதும் விரும்புகிறார்கள். தை மாதத்தில் ஆரம்பிக்கும் கருமங்கள் பெரும் வெற்றியையும் சிறப்பையும் கொடுக்கும் என்பதில் இந்து மக்கள் பெரிதும் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

உதயமாகும் தைத்திங்கள் அனைத்து மக்களினதும் வாழ்வில் மகிழ்ச்சியையும், சுபீட்சத்தையும், உயர்வையும் கொடுக்க வேண்டும் என இனிய தைப்பொங்கல் நன்னாளில் இறையருளை வேண்டிப் பிரார்த்திப்போமாக!



ஊரெழு
அ. கனகசூரியர்

## மாகாண பாடசாலைகளின் அபிவிருத்தி மானியமாக ரூ. 850 மில்லியன் ஒதுக்கீடு

(முகம்மட் முக்தார்)


கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு மாகாண பாடசாலைகளின் அபிவிருத்தி மானியமாக நிதி ஆணைக்குழு 850 மில்லியன் ரூபாவை 2025 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கீடு செய்துள்ளதாக மாகாண கல்வி அமைச்சின் செயலாளர். கே.குணநாதன் தெரிவித்தார்.

இந்நிதி மாணவர் எண்ணிக்கை, பாடசாலைகளின் எண்ணிக்கை அடிப்படையில் கிழக்கில் உள்ள 17 கல்வி வலயங்களுக்கும் பிரித்து வழங்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

மாணவர்களின் கற்றல் விருத்தியை முக்கிய நோக்கமாகக் கொண்டு இந்நிதி அத்தியாவசிய நிர்மாணங்களுக்கும், திருத்தங்களுக்கும் பயன்படுத்தப்பட வேண்டுமென வலயக் கல்விப்பணிப்பாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

கிழக்கில் அம்பாறை கல்வி மாவட்டத்தில் 03 கல்வி வலயங்களும் கல்முனை கல்வி மாவட்டத்தில் 04 கல்வி வலயங்களும் திருமலை கல்வி மாவட்டத்தில் 05 கல்வி வலயங்களும் மட்டக்களப்பு கல்வி மாவட்டத்தில்05 கல்வி வலயங்களும் உள்ளன.

இவ்வலயங்களில் சுமார் 04 இலட்சம் மாணவர்கள் கற்பதுடன் சுமார் 30,000 ஆசிரியர்களும் கல்வி கற்பிக்கின்றனர்.



# போதை மாத்திரைகளுடன் இருவர் கைது

(பு.கஜிந்தன்)

சாவகச்சேரி நகரப் பகுதியில் 200 போதை மாத்திரைகளுடன் இரண்டு இளைஞர்கள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் பொறுப்பதிகாரியின் வழிகாட்டலின் கீழ், உப பொலிஸ் பரிசோதகர் மயூரன் தலைமையிலான குழுவினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

போதை மாதித்திரைகளை விற்பனை செய்வதற்காக கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் - சாவகச்சேரிக்கு வருகை தந்த 20 மற்றும் 24 வயதுடைய இருவரை சாவகச்சேரி பொலிஸார் சோதனையிட்டபோது அவர்களிடம் போதை மாத்திரைகள் இருப்பது தெரியவந்தது. இந்நிலையில் அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கரையொதுங்கிய சிலை



(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணம் – வடமராட்சி கிழக்கு, வத்திராயன் கடற்கரை பகுதியில் கண்ணன் ராதை ஆகிய இரு தெய்வங்களும் இணைந்த சிலை ஒன்று கரையொதுங்கியுள்ளது

அண்மைக்காலமாக காலநிலையில் ஏற்பட்ட மாற்றங்களினால் கடல் சீற்றங்கள், சூறாவளி, புயல்கள், தென்கிழக்கு ஆசியாவின் பல நாடுகளில் ஏற்பட்டது.

இதன்போது இந்தோனேசியா, மலேசியா அல்லது இந்தியா, போன்ற ஏதாவது ஒரு நாட்டில் இருந்து இந்த சிலை வந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது.

# தங்கத்தீவு தகரத்தீவாக மாற்றம் பெற்றுள்ளது

## இளங்குமரன் எம்.பி தெரிவிப்பு



(பு.கஜிந்தன்)

தங்கத் தீவாக இருந்த தீவகம், கடந்த ஆட்சியாளர்களின் திறனற்ற ஆட்சி காரணமாக தகரத் தீவாக மாற்றம் பெற்றுள்ளது என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவு பகுதியைச் சேர்ந்த 725 மாணவர்களுக்கு, ஈழ நிசான் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் 7 இலட்சத்து 75ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (12) புங்குடுதீவு அம்பலவாணர் கலையரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த அரசாங்கத்தை விட எமது அரசாங்கத்தில் கல்விக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் கல்விக்கு மேலும் அதிக நிதியை ஒதுக்கி கல்வித் துறையை மேம்படுத்துவோம்.

நாட்டை விட்டு செல்வோர் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகின்றது. நாங்கள் எமது நாட்டினுள்ளேயே தொழிற் துறைகளை உருவாக்கும் போது மாணவர்களும் இங்கே கல்வி கற்க கூடிய சூழ்நிலை ஏற்படும்.

சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதனூடாக வருமானத்தை ஈட்டிக்கொள்ளும் இடமாக மாற்றம் பெற்று தீவகம் மீண்டும் செந்தளிப்பு பெறும். தீவகத்தை மீண்டும் தங்கத் தீவாக மிளிர வைப்போம்.

எதிர்காலத்தில் வடக்கில் மூன்று மத்திய பொருளாதார நிலையத்தை அமைப்பதற்கு தீர்மானித்துள்ளோம். ஒரு பொருளாதார மத்திய நிலையத்தை மாங்குளத்திலும், பரந்தன் – ஆனையிறவை மையப்படுத்திய இடத்திலும் பலாலியில் ஒரு பொருளாதார மத்திய நிலையத்தையும் உருவாக்க திட்டமிட்டுள்ளோம். இங்கேயே தொழில்துறையை உருவாக்கி, இங்கேயே உழைத்து உண்ணக்கூடிய ஒரு நிலையை உருவாக்குவோம்.

கடந்த காலத்தில் மனித வளம் சிறந்த முகாமைத்துவம் இல்லாமையால் வீணடிக்கப்பட்டது. ஆனால் இனி நாங்கள் மனித வளத்தை சிறந்த முறையில் திட்டமிட்டு நிர்வகித்து நாட்டை கட்டியெழுப்புவோம் என்றார்.

# இலவச கல்வி நிலையம் திறப்பு




(பு.கஜிந்தன்)

இலவச கல்வி நிலையமான Faith learning center சனிக்கிழமை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இந்த கல்வி நிலையமானது அராலி மேற்கு, வட்டுக் கோட்டையில் திறந்து வைக்கப்பட்டது.

தமிழர்களின் பாரம்பரிய கோலாட்டத் துடன் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டு, கல்வி நிலையத்தின் கல்வெட்டு திரை நீக்கம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றி வைக்கப்பட்டு நிகழ்வு ஆரம்பமானது. பின்னர் வரவேற்புரை, தலைமையுரை, விருந்தினர்களின் உரைகள் மற்றும் மாணவர்களது கலை நிகழ்வுகள் என்பன நடைபெற்றன.

இந்த கல்வி நிலையத்திற்கு நிதியை வழங்கிவரும் திருமதி. வசந்தா ராஜேஸ்வரன் நிகழ்வுக்கு தலைமை தாங்கியதுடன், பிரதம அதிதியாக வைத்தியர் வின்ஸ்டன் ஜெசுரன் மற்றும் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# மெசிடோ பணிப்பாளரைக் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் ஆஜராகுமாறு உத்தரவு



(எஸ்.ஆர்.லெம்பேட்)

வாக்குமூலம் ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோவை நாளை கொழும்பு குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் ஆஜராகுமாறு ஞாயிற்றுக்கிழமை(12) அவரது அலுவலகத்தில் வைத்து கடிதம் கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 09ஆம் திகதி முல்லைத்தீவில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பில் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் கொழும்பு குற்றப்புலனாய்வு திணைக் களத்தில் ஆஜராகுமாறு அழைப்பு கடிதம் வழங்கப்பட்டது.

மன்னார் கோந்தைபிட்டியில் அமைந்துள்ள குற்றவியல் விசாரணை அலுவலகத்தில் இருந்து வருகை தந்த பொலிஸார் குறித்த அழைப்புக் கடிதத்தை கையளித்துள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை (12) காலை மன்னாரில் உள்ள அவரது வீட்டிற்கு சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் அவர் வீட்டில் இல்லாத நிலையில் அவரது மனைவியிடம் விசாரணைகளை முன்னெடுத்ததுடன் மன்னாரில் உள்ள அலுவலகத்திற்குச் சென்று குறித்த கடிதத்தைக் கையளித்தனர்.

எனினும் தன்னால் விசாரணைக்காக அன்றைய தினம் சமூகமளிக்க முடியாத நிலை உள்ளதாகவும், அதற்கான திகதியை மாற்றி வழங்குமாறு கோரிக்கைவிடுத்தார்.

அதற்கு அமைவாக வெள்ளிக்கிழமை 17ஆம் திகதிகாலை 10 மணிக்குக் கொழும்பு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு சென்று வாக்கு மூலத்தை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

# 'காட்டு விநாயகம்' சிறப்பு மலர் வெளியீடு

(அந்தணன்)


முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை கிராமத்தில் உள்ள காட்டு விநாயகர் ஆலயத்தின் மஹாகும்பாபிஷேக சிறப்பு மலரான காட்டு விநாயகம் என்ற நூல் நேற்று முன்தினம் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

ஶ்ரீமதி ஹேமா சண்முக சர்மா காட்டுவிநாயகம் நூலினை சிறப்பட தொகுத்துள்ளார்.

நூல் வெளியீட்டு நிகழ்வு ஆலயத் தலைவர் த.பரஞ்சோதி தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட செயலக ஓய்வு நிலை பிரதம கணக்காளர் ம.செல்வரட்ணம், சிறப்பு விருந்தினராக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் உள்ளிட்ட அரச திணைக்கள அதிகாரிகள், தொழிலதிபர்கள், உள்ளிட்டவர்கள் பலர் கலந்து சிறப்பித்தனர்.

# இராணுவத்தால் கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(அந்தணன்)

இராணுவத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு ஒன்று நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் நடைபெற்றது.

இலங்கையில் உள்ள நிப்போன் கல்வி மற்றும் கலாசார மையத்தின் நிதி உதவியுடன் இலங்கை இராணுவ சமூக பராமரிப்பு சேவையினரால் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள 59ஆவது படைப்பிரிவின் அலுவலகத்தில் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வன்னி பாதுகாப்பு படைத்தலைமை அதிகாரி,மேஜர் ஜெனரல் ஜே.பி.சி. பீரிஸ் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளதுடன்

நிப்போன் சேவை மையத்தின் பொதுச் செயலாளர் நிகதன்னி சந்திரசிறி, கொக்கிளாய் விகாரையின் விகாராதிபதி திஸ்ஸ குணரத்தின. இராணுவ உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மிகவும் நலிவுற்ற குடும்பங்களை சேர்ந்த 36 மாணவர்களுக்கு புத்தக பைகள் மற்றும் காலணிக்கான வவுச்சர்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

# இந்திய துணை தூதரகத்தால் பொங்கல் பொதி வழங்கல்



(பு.கஜிந்தன்)

தொண்டைமானாறு பகுதியைச் சேர்ந்த 50 பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு பொங்கல் பொதிகள் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் வழங்கி வைக்கப்பட்டன.

இதில் யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதுவர் சாய்முரளி, பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் பிரதேச செயலர் சத்தியசீலன், கிராம சேவகர் வைகுந்தன் மற்றும் பயனாளிகளும் கலந்து கொண்டனர்.

# கேவில் - யாழ் தனியார் பஸ் சேவை

யாழ்.வடமராட்சி கிழக்கு கேவில் தொடக்கம் யாழ்ப்பாணம் வரையிலான மேலுமொரு பஸ் சேவை வடமராட்சி கிழக்கு தனியார் பஸ் சங்கத்தினரால் ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த பஸ் சேவையானது காலை 09.45 மணிக்கு கேவிலில் இருந்து புறப்பட்டு மருதங்கேணி, புதுக்காடு வழியாக யாழ்ப்பாணம் சென்றடைந்து மீண்டும் மாலை 03.35 மணிக்கு யாழ்ப்பாணம் தனியார் பஸ் நிலையத்திலிருந்து புறப்பட்டு கேவிலை சென்ற டையும்.

இந் நிகழ்வில் வடமராட்சிக் கிழக்கு தனியார் பஸ் உரிமையாளர் சங்க தலைவர் மற்றும் செயலாளர், பிரதேச செயலக உத்தியோகத்தர், கிராம சேவையாளர், இளைஞர்கள் என பலரும் கலந்து கலந்து கொண்டனர்.

# மன்னாரில் பிடிபட்ட இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல்



(பு.கஜிந்தன்)

மன்னார் வளைகுடா கடற்பரப்பில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட எட்டு இந்திய மீனவர்களும் எதிர்வரும் 22ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட எட்டு இந்திய மீனவர்களும் கடற்படையினரால் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற பதில் நீதவான் எஸ்.சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே குறித்த எட்டு இந்திய மீனவர்களும் எதிர்வரும் 22ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.



ஏரிசி (ATC) கல்வி நிறுவனத்தில் கல்வி கற்று 1985ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களால், தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு பொங்கல் பொதி வழங்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை இணுவில் ATC கல்வி நிறுவனத்தில் நடைபெற்றது.

படம் பு.கஜிந்தன்



# பொங்கல்



அருள் சத்தியநாதன்



## நன்றி உணர்வுகளின் பிரவாகமே பொங்கல்

சூரிய வணக்கத்துடன் இன்று முதல் ஆரம்பமாகவுள்ள பொங்கல் விழா உலகெங்கும் இரண்டு முதல் நான்கு நாட்கள் வரை கொண்டாடப்படவுள்ளது. பொங்கல் விழா அர்த்த புஷ்டியுடன் கொண்டாடப்பட வேண்டுமானால் வெப்ப வலய பிரதேசங்களுக்குள் நாம் வசிக்க வேண்டியது அவசியம். கடும் குளிருக்கு மத்தியில் நத்தார் கொண்டாடப்படுகிறது. நத்தாரை குளிர், பனியுடன் தொடர்புபடுத்தியே நாமும் எண்ணிப் பழகிவிட்டோம். ஆனால் நத்தாரையோ அல்லது தீபாவளியையோ கொண்டாட எமக்கு காலநிலை அவசியமில்லை. ஆனால் பொங்கலுக்கு சூரிய ஒளியும் வெப்பமும் அவசியம். ஏனெனில் பொங்கல் வீட்டுக்கு வெளியே கொண்டாடப்பட வேண்டிய பண்டிகை. இதனால் இலங்கை, தமிழகம், மலேசியா, சிங்கப்பூர் என்பன பொங்கல் கொண்டாட்டத்துக்கு பொருத்தமான நாடுகளாகத் திகழ்கின்றன.

கி.மு. 200ஆம் ஆண்டுகளில் பொங்கல் கொண்டாடப்பட்டதற்கான சான்றுகள் காணப்படுவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சோழ மன்னனான முதலாம் குலோத்துங்க மன்னர் பொங்கல் விழா கொண்டாட்டத்துக்கென ஒரு காணியை வீரராகவ கோவிலுக்கு நன்கொடையாக வழங்கியதாக ஒரு செய்தி, பொங்கல் ஒரு பழைமையான நிகழ்வு என்பதைக் காட்டுவதற்காக முன் வைக்கப்படுகிறது. சமயங்கள் தோன்றியிராத மற்றும் கடவுள் என்ற ஒரு சக்தியை மக்கள் அறிந்திராத காலப்பகுதியில், தமிழகத்தில் மட்டுமல்ல, உலகின் வேறு பல நாடுகளிலும் மக்கள் நன்றி தெரிவிக்கும் வழக்கத்தை பின்பற்றி வந்திருக்கிறார்கள்.

குளிரில் இருந்து விடுதலை தருவது வெப்பம். அந்த வெப்பத்தை தருவது சூரியன். பயிர்பச்சை செழிப்பாக வளர்வதற்கு சூரிய ஒளி காரணமாகிறது. அதே சமயம் அதிக வெயில் தாகத்தையும், தண்ணீர் கிடைக்காமையையும், வரட்சியையும் ஏற்படுத்துவதோடு பயிர்கள் கருகிப் போவதற்கும் காரணமாகிறது என்பதையும் மனிதன் புரிந்து வைத்திருந்தான். குளிர்காலம் அல்லது மாரி காலம் முடிந்ததும் பளிச்சென வானில் தோன்றும் சூரியன், மக்கள் மத்தியில் மகிழ்ச்சி ஆரவாரத்தையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தியது.

அன்றைய விவசாய பெருங்குடி மக்கள் இதை - இயற்கைக்கும் மனித வாழ்க்கைக்கும் இடையிலான தொடர்புகளை நீண்டகாலமாக அவதானித்து வந்ததன் விளைவாக, தமது வாழ்க்கையின் சிறப்புகளுக்கு மட்டுமின்றி சிரமங்களுக்கும் சூரியனே காரணம் என்பதைக் கண்டறிந்தான். அவ்வாறானால் சூரியனுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும், வணங்கி உணவுகளை அவனுக்காக படைக்க வேண்டும் என்ற முடிவுக்கு அன்றைய மக்கள் வந்தார்கள்.

இந்த அடிப்படையில், மனிதனின் ஆதி வணக்கம் சூரிய வணக்கமாகவே இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வர முடிகிறது. அந்த ஆரம்ப நிலையில் சூரிய வணக்கம் எவ்வாறு இருந்திருக்கும், படைக்கப்பட்டது சோறு மட்டும் தானா அல்லது அசைவமும் இருந்ததா என்பதை எல்லாம் யூகிக்கலாமே தவிர, நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் கிடையாது. இச்சூரிய ஆராதனையை பொங்கலின் ஆரம்ப வடிவமாகக் கொள்ளலாம்.

கால்நடைகளை வைத்திருப்போர் மட்டுமே ஒரு காலத்தில் சூரிய மற்றும் மாட்டுப் பொங்கலை கொண்டாடினர். ஐம்பது அறுபதுகளில் இலங்கையில் பொங்கல் அனைத்து தமிழர்கள் மத்தியிலும் ஒரு கொண்டாட்டமாகக் காணப்படவில்லை. எனினும் சிங்கள விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் மத்தியில் பொங்கல் கொண்டாடும் பழக்கம் ஓரளவுக்கு காணப்பட்டதற்கான தகவல்கள் உள்ளன. ஆனால் அடுத்துவந்த தலைமுறை இதை இனவாத கண்ணோட்டத்துடன் காண முற்பட்டதால் அக் கால்நடைகள் தமக்கான சிறப்புத் தினத்தை இழந்தன.

அக்காலத்தில் பெருந்தோட்டப் பகுதிகளில் பெருமளவு கால்நடைகள் காணப்பட்டதால் இப்பகுதியில் பொங்கல் களைகட்டியது. மட்டக்களப்பு மாவட்டத்திலும் காணப்பட்டது. யாழ்ப்பாணத்தில் சிறப்பாக பொங்கல் கொண்டாடப்பட்டதா என்று தெரியவில்லை. தமிழகத்தில் பரவலாக பொங்கல் கொண்டாட்டம் காணப்பட்டாலும் அது ஒரு எழுச்சியைக் கண்டது திராவிட சிந்தனைகள் வலுப்பெற்ற பின்னரேயே.

காவியுடையும், நெற்றியில் திருநீறுமாகக் காட்சியளித்த திருவள்ளுவரை மீட்டெடுத்து. சமய வரையறைகளுக்கு அப்பாற்பட்டவர் என்றும் அவர் சமண மதத்தவர் என்றும் அறிவித்ததோடு திருவள்ளுவருக்கும் திருக்குறளுக்கும் ஓர் உயர் இடத்தை அளித்தது தி.மு.க.வே. என்பதை அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட முடியும். இதேபோல, பொங்கல் பொங்குதல் என்பதற்கு பல

## பொங்கலும் அமெரிக்க Thanks giving dayயும் நன்றி தெரிவிக்கும் ஒரே அடிப்படை

அர்த்தங்கள் கூற முடியும். ஒரு திரவமோ அல்லது உணர்ச்சி பிரவாகமோ சடுதியாக மேல் எழுந்து சிதறுவதை பொங்குதல் என்கிறோம். கடலும் பொங்கும். அது அபாயத்தைக் குறிக்கும். எனினும் பொங்குதல் என்பது அன்பு, ஆச்சரியம், உணர்ச்சிப் பெருக்கு என்பனவற்றையே குறிப்பிடும்.

நதிக்கரை நாகரிகத்தின் போது மிருக வளர்ப்பு படிப்படியாக உச்சம் பெறத் தொடங்கியது. இவற்றில் பசுவளர்ப்பு பிரதானமானதாக விளங்கியதால் அச் செல்வம் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்றானதாக கருதப்பட, அதைச் சுற்றி புனிதம் சார்ந்த, தெய்விகம் சார்ந்த ஒரு கட்டமைப்பு இயல்பாகவே தோன்றியது. மனிதர்கள் களனிகளில் உணவுகளை விளைவிக்கும் பணிகளில் எருதுகளை பயன்படுத்தினர். பட்டிகளில் பசுக்கள் பால் சுரந்தன. பயிரும் பாலுமே மக்களின் பிரதான உணவானது. கூடவே கால் நடைகளின் மாமிசமும்.

அதிக எண்ணிக்கை கொண்ட கால்நடைகளை வைத்திருப்பவன் செல்வந்தன். அதிக கால்நடைகளை வைத்திருக்கும் நாடு செல்வந்த நாடு. எதிரி நாட்டரசன் ஒரு நாட்டை சண்டைக்கு அழைப்பதற்காக முதலில் செய்வது அந்நாட்டின் ஆநிறைகளை கவர்வதன் மூலம்தான். புரோட்டீன் நிறைந்த மாமிசத்தையும் கல்சியமும் ஆதார சத்துகளும் மிக்க பாலையும் தருவதால் கால்நடைகளை சமூகத்தால் கொண்டாடப்படும் விலங்குகளாக விளங்கியதில் ஆச்சரியம் இருக்க முடியாது. எனவே எதையும் தரக் கூடிய விலங்காக, காமதேனுவாக அது போற்றப்பட்டது. தெய்வாம்சம் மிக்க நந்திதேவரானது, பிராமணர்களுக்கு அடுத்தாக வணக்கத்துக்குரிய உயிராக மக்களால் கருதப்பட்டது. கோமாதா எனப் பெயர் பெற்றது. அது சிறுநீர் கழிக்கையில் ஒரு பாத்திரத்தில் மிடித்து அருந்துவதை இந்தியாவில் தாராளமாகவே காண முடியும். இந்தியாவில் மட்டுமல்ல, இலங்கையிலும் மாமிசம் உண்ணும் பலர் மாட்டிறைச்சியை தவிர்த்துவிடுகிறார்கள். உலகிலேயே அதிக அளவில் சைவ உணவுகளை உண்பவர் எண்ணிக்கை இந்தியாவில்தான் அதிகம். மாமிசம் உண்பவர்களில் பலர் செவ்வாய், வெள்ளி நாட்களில் அல்லது விரத நாட்களில் மரக்கறி உணவுகளை எடுத்துக் கொள்வதை தவிர்ப்பதைக் கவனித்திருப்பீர்கள். மேலும் மரக்கறி உணவு உயர்வானது, புனிதமானது, மாமிச உணவு தாழ்வானது, புனிதமற்றது என்ற ஒரு மூட நம்பிக்கை நம்மில் பலரிடம் உள்ளது. அசைவம் கலந்த சைவ உணவே ஊட்டச்சத்துகள் நிறைந்த சம உணவு என்பதே உண்மை. எந்த உணவும் மேலானதும் இல்லை, கீழானதும் இல்லை. எந்த உணவானாலும் தொண்டைக்குக் கீழே அது இரசாயன பதார்த்தங்களாகவே அறியப்படுகின்றது என்பதை உணர்ந்து கொண்டால் உணவுகள் தொடர்பான மூட நம்பிக்கைகள் களையப்பட்டுவிடும்.

பண்டைய வாழ்வியலில் அரிசியும், கால்நடைகளும் பெரும் பங்கு வகித்தன. சாணம் பசளையாகவும், வீட்டை மெழுகுவதற்கும், அடுப்பு எரிக்க வரட்டியாகவும், தோல் இசைக் கருவிகள் உருவாக்கவும், பாதணிகளை உருவாக்கவும், சுமக்கும் பைகளை உருவாக்கவும் பயன்பட்டன. எனவே அன்றைய மக்களுக்கு பசுவும் எருதும் பெறுமதி சேர்க்கப்பட்ட விலங்குகளாக விளங்கின என்றால் அது பொருத்தமானதாகவே இருக்கும். நாம் பொங்கல் பண்டிகையை இந்தப் பின்னணியில் பார்த்தால்தான் அதன் அவசியமும், தொன்மைச் சிறப்பும், இத்தனை நூற்றாண்டுகளாக அது நீடித்து வருவதற்கான காரணமும் புரியும். முதலில் ஆதவனுக்கும் பின்னர் கால்நடைகளுக்கும் நாம் நன்றி தெரிவிக்கிறோம். ஆனால் இந்த நன்றி தெரிவிக்கும் பழக்கமும் வழக்கமும் முதலில் எருதுகளுக்கும் பசுக்களுக்கும் நன்றி தெரிவிக்கும் சடங்காகவே ஆரம்பித்து பின்னர் சூரியனை வணக்கமாக பரிணாமித்திருக்கலாம்.

பொங்கலின் போது முதலில் பசும்பாலை பொங்கிவரச் செய்து அதில் புத்தரிசியை இடுகிறோம். இவ்விரண்டுமே அன்றை வாழ்வியலில் இன்றியமையாதவை. பிற்காலத்தில் வாழைப்பழம், கரும்பு (இரண்டுமே புத்துணர்ச்சி ஊட்டக் கூடிய இனிப்பைக் கொண்டவை) பால் தரும் தேங்காய் என்பன சேர்த்துக் கொள்ளப்பட்டன. இத்தினத்துக்கு முன்னதாக, வீட்டில் உள்ள பழைய பொருட்களை அகற்றி வீட்டை புதுப்பிக்கும் ஒரு வேலையும் நடைபெறுகிறது என்பதை மறந்துவிடக் கூடாது. பால், அரிசி என்பவற்றுக்குப் பின்னர் எருதுகள் வருகின்றன. உழைப்பையும், உணவையும் வாழ்க்கைக்குரிய ஏனைய பொருட்களையும் வழங்கிய அவற்றை குளிப்பாட்டி அலங்கரித்து அவற்றுக்கு எதிரே பொங்கல் இடப்படுகிறது. அன்றைய தினம் அவற்றுக்கு நல் உணவு, வயிறார வழங்கப்பட்டு ஓய்வாக இருக்க அனுமதிக்கப்படுகிறது.

பொங்கல் போன்ற குடும்பம் சார்ந்த சமூக நிகழ்வுகள் மாரி காலம் அல்லது பனிக்காலம் முடிந்து, வசந்த காலத்தின் ஆரம்பத்தில் நிகழ்வதே உலகெங்கும் வழமையில் உள்ளது. குளிர் நாடுகளிலும் வசந்தகால விழாக்கள் வழமையில் உள்ளன. வசந்த காலத்தில் மரங்கள் தளிர்விட்டு பூக்க ஆரம்பிக்கின்றன. அது போலவே மனிதர்களுக்கு இது இன விருத்திக்கான காலமாகக் கருதப்படுகிறது. இளைஞர்களும் யுவதிகளும் ஒன்று கூட களியாட்டங்களில் ஈடுபட வசந்தகாலம் அனுமதிக்கிறது. அந்தந்த சமூகங்கள் அதற்கான கட்டமைப்புகளை ஏற்படுத்தி வைத்துள்ளன. இத்தகைய ரோமர்கால வசந்த பண்டிகைகள் அந்த இராச்சியம் கிறிஸ்தவமயமான பின்னர் கிறிஸ்துவ பண்டிகைகளாக மாறின என்பது வரலாற்றாசிரியர்களின் முடிவாகும். சதுர்நாலியா என்ற உரோம பண்டிகை, சனிக் கிரக கடவுளை முன்வைத்து உருவானது. டிசம்பர் 17ஆம் திகதி முதல் 12 தினங்களாக இது கொண்டாடப்படும். இதுவே பின்னர் டிசம்பர் 25க்கும் மாற்றப்பட்டு கிறிஸ்துமஸ் பண்டிகையானது என்பர்.

குளிர்காலம் முடிவடைந்து வெயில் உதயமாகும் போது அதைக் கொண்டாட இயல்பாகவே ஒரு மனநிலை தோன்றும். மழைக்காலம் முடிந்ததும் நீல வானில் சூரியன் உதிப்பதை கொண்டாடத்தான் செய்வார்கள். பொங்கல் என்பது உணர்வுகளின் பிரவாகம். இன உணர்வுகளின் பிரவாகம் என்றும் சொல்லலாம். அதனால்தான், இளம் பெண்களைக் கவரக் கூடிய எருதுகளை ஓட விட்டு அவற்றை அடக்கும் ஏறு தழுவுதல் வீர விளையாட்டானது. ஆண்மைத் திறனை முழுமையாக வெளிப்படுத்தும் றகர், உதைப்பந்தாட்டங்களைக் காண்பதற்காக பெருமளவு பெண்கள் மைதானங்களில் கூடுவதை இதனுடன் ஒப்பிடலாம்.

குளிர் நாடுகளில் மட்டுமல்ல, தமிழ் நாட்டிலும் கருக்கட்டலுக்கான ஒரு காலமாகவே பொங்கல் கருதப்பட்டு வந்துள்ளது. கிறிஸ்தவர்கள் டிசம்பர் 25ஆம் திகதியின் பின்னரேயே திருமணங்களை நடத்த முன்வருவார்கள். பொங்கல் முடிந்ததுமே, தை பிறந்ததுமே தமிழர்கள் திருமணங்களை நடத்துவார்கள். பெப்ரவரிக்கு சென்றால் கருக்கட்டலை ஊக்குவிக்கும் காதலர் தினம் வருவதையும் இங்கே அவதானிக்கலாம்.







# சிறப்பு மலர்


## சங்க இலக்கியத்தில் தமிழர் திருநாள்

# தைப்பொங்கல்

### கனவுகளுக்கு கரம் கொடுப்போம்

மலிவான விலையில்
அரிசி வாங்கி
பானையில் இட்டுப்
பொங்க
வழியில்லாத்
தேசத்தில் தான்
இன்றும் வருகிறது
தைப்பொங்கல்!
நெல்லுக்குப் பேர்போன
தேசத்தில் இன்றும்
இறக்குமதி அரிசியிலே
வாழும் இந்த
அவலம் என்று தான்
தீருமோ?
ஆனாலும்
புதிய மாற்றங்களை
வரவேற்போம்!
அகமும் புறமும்
தூய்மையான தேசம்
என்ற கனவுடன்
பயணிப்போர்
கனவுகளுக்கு
கரம் கொடுப்போம்!
தரமான மாற்றங்களை
உரமாக எம்மில் இருந்து
உருவாக்குவோம் வாரீர்!!

**- புலோலியூர் வேல்நந்தன் -**



### பிறந்து விட்டதே தைப்பொங்கல்

பாரெங்கும் ஒளி வீசிடவே
தைத் திருநாள் நாளினிலே
பொங்கல்தனை பொங்கலிட்டு
நன்றி கூறி வரவேற்போம்!
நல் வாழ்வு மலர்ந்திடவே
நற்பண்பு மலர்ந்திடவே
நற்பணிகள் எங்கும் ஓங்கிடவே
உற்றோரும் மற்றோரும்
அவனியினில் ஒன்றிணையவே
கரம் கோர்த்து பொங்கலிடுவோம்!
கதிரொளி வீசிடவே புதுமைகள்
புலர்ந்திடவே
தரையெங்கும் இன்பம் பெற்றிடவே
மத்தாப்பு வெடித்திங்கு
ஊரெல்லாம் உளம் மகிழவே
உவகையுடன் பொங்கிடுவோம்
பொங்கல் நாளினை கொண்டாடிடுவோம்!

**-உடப்பூர் வீரசொக்கன்**



**கலாநிதி ஆர். மகேஸ்வரன்**
**பிரதம நூலகர்**
**பேராதனைப் பல்கலைக்கழகம்**

கதிரவனுக்கு நன்றியறிவித்து, உழவுத்தொழிலைச் சிறப்பிக்கும் விழாவாக மட்டுமன்றி, ஓரினத்தின் பண்பாட்டுக் கூறுகளையும் மரபுகளையும் மானுட விழுமியங்களையும் கொண்டுள்ள விழா தைப்பொங்கல் விழாவாகும். பொங்கல் பற்றி தமிழ் இலக்கியத்தில் பல சான்றுகள் உள்ளன. பொங்கல் என்ற சொல்லிற்கு சங்க இலக்கியங்களைப் பொறுத்தவரை "கொதித்து மேலெழல்" அல்லது "செழித்தல்" என்ற பொருள் உண்டு . அது உணவுப்பொருளின் பெயராக முதன் முதலாக ஒன்பதாம் நூற்றாண்டில் வந்த சீவக சிந்தாமணியில் குறிப்பிட்டுள்ளது. பண்டைக்காலத்தில் நெற்பயிர்ச்செய்கை செழித்துச் சிறந்திருந்ததைப் பல இலக்கியங்கள் அழகாக எடுத்துக் கூறுகின்றன. உழவுத் தொழிலின் அனைத்துப் படிநிலைகளையும் சங்கப் பாடல்களில் காணலாம்.

சேற்றில் நாற்றை அழுத்தி நடுவதை நற்றிணையில்
"நீர்உறு செறுவின் நாறுமுடி அழுத்த
நடுநரொடு சேறி ஆயின்..." என குறிப்பிடப்பட்டுள்ளது.

"பைதுஅற விளைந்த பெருஞ்செந் நெல்லின் தூம்புடைத் திரள்தான் துமிந்த வினைஞர்" என அறுவடை செய்யும் உழவரைப் பற்றி பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது.

புறநானூறு என்ற சங்க இலக்கியத்தின் 22வது பாடலில், குறுங்கோழியூர்க் கிழார் என்ற புலவர்,

"அலங்கு செந்நெல்
கதிர் வேய்ந்த பாய்
கரும்பின் கொடிக்கீரை
சாறு கொண்ட களம் போல.."

எனக் குறிப்பிடுகின்றார். அதாவது நெல்லோடு வேயப்பட்ட வைக்கோல் கூரை வீடும், கருப்பஞ்சருகு வேய்ந்த கூரை வீடுகளும் தனித்தனியே விழாக் கொண்டாடப்பட்ட களம் போலப் பொலிவுடன் காட்சி தருகின்றன; என்று கூறுகின்றார். அறுவடைக்களங்களில் விழாக்கள் கொண்டாப்பட்டிருக்கின்றன என்ற செய்தி இதன் வாயிலாகச் சொல்லப்படுகிறது.

தை- என்னும் சொல் சங்க நூல்களில் பல இடங்களிலும் வருகிறது. சங்ககாலத்தில் பொங்கல் நாளை அறுவடை விழாவாகவே தமிழர்கள் கொண்டாடியிருக்கின்றனர்.

'தைஇத் திங்கள் தண்கயம் படியும்' (நற்றிணை)
'தைஇத் திங்கள் தண்ணிய தரினும்' (குறந்தொகை)
'தைஇத் திங்கள் தண்கயம் போல்' (புறநானூறு)
'தைஇத் திங்கள் தண்கயம் போது' (ஐங்குறுநூறு)
'தையில் நீராடி தவம் தலைப்படுவாயோ' (கலித்தொகை)

எனப்பலவாறாக தைத்திருநாளின் சிறப்பியல்புகளை பழந்தமிழர் இலக்கியங்கள் தெளிவுபடுத்திக் காட்டுகின்றனர். இவைஃ தமிழர் திருநாளை பழந்தமிழன் எவ்வாறு சிறப்பாகக் கொண்டாடினான் என்பதனை எடுத்துக்காட்டுகின்றன. கி.பி ஒன்பதாம் ஆம் நூற்றாண்டுகளில் எழுந்த சீவக சிந்தாமணி என்னும் காப்பியத்திலும் பொங்கல் பற்றி 'மதுக்குலாம் அலங்கல் மாலை

மங்கையர் வளர்த்த செந்தீப்

புதுக்கலத்து எழுந்த தீம்பால் பொங்கல்' என கூறுவதன் வாயிலாக பொங்கல் என்ற சொல்லை முதல் தடவையாக இலக்கியத்தில் பதிவு செய்கின்றது.

தை முதலாம் திகதி அன்று தமிழர்களால் சிறப்பாக கொண்டாடப்படும் ஒரு தனிப்பெரும் விழாவாக இத் தைப்பொங்கல் விழா கொண்டாடப்படுகிறது. தமிழர் திருநாளாக இலங்கை, தமிழ்நாடு,மலேசியா, சிங்கப்பூர், ஐரோப்பிய நாடுகள், வட அமெரிக்கா, தென் ஆபிரிக்கா, மொரிசியசு, கனடா, ஐக்கிய ராஜ்யம்,அவுஸ்திரேலியா என தமிழர் வாழும் அனைத்து நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது. இவ்விழா சமயங்கள் கடந்து அனேக தமிழர்களால் கொண்டாடப்படுகிறது. பொங்கல், உழைக்கும் மக்கள் இயற்கைக்கும், மற்ற உயிர்களுக்கும் சொல்லும் ஒரு நன்றியறிதலாகவே கொண்டாடப்படுகிறது.

சங்ககா லத்தில் அறுவடை காலத்தில் நல்ல மழை பொழியவும், நாடு செழிக்கவும் பெண்கள் இவ்விரதத்தினைக் கடைப்பிடித்தார்கள். தை முதல் நாளில் இந்த விரதத்தை முடிப்பார்கள். நல்ல விளைச்சல் கொடுத்தமைக்காக பூமி,பகலவன், உதவிய கால்நடை, போன்றவற்றிற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக சர்க்கரைப் பொங்கல் படைத்து வழிபட்டனர். இதுவே நாளடைவில் மூன்று தினங்கள் கொண்டாடும் பொங்கல் கொண்டாட்டமாக மாறி வந்தது.பொங்கல் பண்டிகையைப் பொறுத்தவரையில் எக்காலத்திலும் விவசாயம் சம்பந்தபட்டதாகவே இருந்துள்ளது என்பது யாரும் மறுக்க முடியாத உண்மையாக இருந்து வருகிறது. மணிமேகலையின் ஆரம்பமான "விழாவரை காதையில்" இந்திர"விழா என்ற பெயரில் பொங்கல் கொண்டாடப்பட்டது. இப்போது,பொங்கல்,தைப்பொங்கல்,மாட டு பொங்கல்,காணும் பொங்கல் என்ற மூன்று நாட்கள் மட்டுமே கொண்டாடப்படுகிறது. ஆனால்,அந்த காலத்தில் இருபத்தி எட்டு நாட்கள் நடந்துள்ளதற்கான சான்றுகள் இருக்கிறது.

சங்க காலம் நிலப்பரப்பை குறிஞ்சி (மலை மற்றும் மலை சார்ந்த), முல்லை,மருதம், நெய்தல் மற்றும் பாலை எனப் பிரிகிறது இங்கே. இதில் தொல்காப்பியம் இந்நிலப்பரப்பிற்கு அதிபதியான கடவுளர்களாகக் குறிப்பவை: முல்லை – மாயோன் – திருமால் (விஷ்ணு), குறிஞ்சி – முருகன், (கார்த்திகேயன்), மருதம் – இந்திரன் , நெய்தல் – வருணன், பாலை – கொற்றவை (சக்தி) என தான் வழிப்பட்டனர். இந்த மருதநிலம் வேளாண்மையும் வேளாண்மை சார்ந்த இடமுமாகும்.

நிர்ணயிப்பவர் என்ற நம்பிக்கை வந்து, தங்கள் கண் முன் காட்சி தரும் அந்த கடவுள் பொங்கல் படைத்து வழிபட்டனர். பூமி இருக்கும் நீர் ஆவியாக்கி மேலே கொண்டு சென்று,ஒன்றுக்கு பத்தாக மழை பெய்விப்பார் என்ற ரீதியில் இந்த நன்றியறிதல் தெரிவிக்கப்பட்டது. தாங்கள் அறுவடை செய்த புதுநெல் தை முதல்நாளில் சமையல் இந்திர விழா என்ற பெயர் பொங்கல் என மாறியது.

மறுபுறம் உழவர்கள் மழையின் உதவியால் ஆடி மாதம் முதல் உழைத்துச் சேர்த்த நெல்லை மார்கழியில் வீட்டிற்குக் கொண்டு வந்து தமது உழைப்பின் பயனை நுகரத் தொடங்கும் நாளே தைப்பொங்கல் என கொண்டாடுகின்றார்கள்

தையல் மகளிர் ஈர் அணி புலர்த்தர,
வையை! நினக்கு மடை வாய்த்தன்று.
மையாடல் ஆடல் மழ புலவர் மாறு எழுந்து,
பொய் ஆடல் ஆடும் புணர்ப்பின் அவர்,
அவர் தீ எரிப் பாலும் செறி தவம் முன் பற்றியோ, 90
தாய் அருகா நின்று தவத் தைந் நீராடுதல்?
நீ உரைத்தி, வையை நதி! - பரிபாடல் 11தாயும் மகளுமாக பனி நீரில் மூழ்கி எழுந்து, ஆங்கே நதிக்கரையில் ஆதிரையோனுக்குச் செய்யும் ஹோமத்தீயை வலம்வந்து, முன்பிறவியில் செய்த தவப்பயனோ இன்று நாம் இருப்பதும் இந்த வைகையில் குளிப்பதும் என்று வியந்து, கண்ணாடி போலத் தெளிவாகத் தெரியும் நீரே, எம் வேண்டுதல்களையும் விருப்பங்களையும் நீ தைத்துக் கொள்ளும் வண்ணம் தெளிவாக இருக்கிறாய், தை நீரே, நீ தான் எங்கள் வேண்டுதல்களை வாங்கிக்கொள்ளத் தக்கவள் என்று கூறுவர்

"நீ தக்காய், தைந் நீர்! நிறம் தெளிந்தாய்' என்மாரும்" - பரிபாடல் 11. மார்கழி முடிந்து வரும் தை தெள்ளிய நீர் ஓடும் காலம். அன்ன நடை, அழகு நடையுடன் வரும் ஆற்றுக் கன்னி, மக்கள்

## எல்லா இந்துக்களும், தமிழர்களும் கொண்டாடும் ஒரு பண்டிகையே..!

தை பிறக்கும் போது, தண்ணீர் நன்றாகவே தெளிந்து விடும். இயற்கையையும், நீர் நிலைகளையும் தெய்வமாக நினைத்த அந்நாள் மக்கள், 'தவத்தை நீராடுதல்' என்பதை ஒரு தவமாகவே செய்தனர்.

சங்ககாலம் நிலப்பரப்பை குறிஞ்சி (மலை மற்றும் மலை சார்ந்த), முல்லை ,மருதம் , நெய்தல் மற்றும் பாலை எனப் பிரிகிறது இங்கே. இதில் தொல்காப்பியம் இந்நிலப்பரப்பிற்கு அதிபதியான கடவுளர்களாகக் குறிப்பவை: முல்லை – மாயோன் - திருமால் (விஷ்ணு), குறிஞ்சி, முருகன், (கார்த்திகேயன்), மருதம்,இந்திரன் , நெய்தல் – வருணன், பாலை – கொற்றவை (சக்தி) என தான் வழிப்பட்டனர். இந்த மருதநிலம் வேளாண்மையும் வேளாண்மை சார்ந்த இடமுமாகும். விவசாயத்திற்கு தேவை மழை. அந்த மழையை கொடுப்பது மேகம். அந்த மேகங்களை இயக்கும் கடவுள் இந்திரன்! ஆகவே காலமாற்றத்தில் இந்திரவிழா பொங்கல் விழாவாக உருமாற்றம் அடைந்துள்ளது !

முதன் முதலாக இந்திர விழா நடத்திய போது அதை நாட்டு மக்களுக்கு முரசறைந்து பொது அறிவிப்பாக அறிவித்தனர்.இப்போது பொங்கல் ஊரையும்,நாட்டையும் சுத்தம் செய்வது போல அப்போதும் நடந்துள்ளது. நகர வீதிகளில் பழைய மணலை மாற்றி புது மணல் பரப்பினர். காவல் தெய்வங்கள் முதல் சிவன் கோயில்கள் வரை சிறப்பு பூசை வழிபாடுகள் நடைப்பெற்றன. இவ்விழா நாளில் பகைமை,பசி,நோய் நீங்க இறைவன் பிரார்த்தனை செய்யப்பட்டது. மழைக்குரிய தெய்வம் இந்திரன்,அவனை வழிபட்டால்,மாதம் மும்மாரி பெய்து பயிர்செழிக்கும் என மக்களின் நம்பிக்கை. பிற்காலத்தில்,சூரியன் பற்றிய அறிவு வந்தவுடன் சூரியன் சந்தோஷத்தை

எண்ணங்களை தைத்துக் கொள்கிறாள்.

உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக விளங்கும் ஆவினத்திற்கு நன்றி கூறும் நாளே மாட்டுப் பொங்கல் நாளாகும். பொங்கலிட்ட பிறகு எச்சில் தண்ணீர் தெளித்தல் என்றொரு மரபும் உண்டு.







# குருக்கள்மடம் கிருஷ்ண ஆலய திருப்பாவை தீர்த்தோற்சவம்



(வெல்லாவெளி நிருபர்)

மட்டக்களப்பு குருக்கள்மடம் கிருஷ்ணர்ஆலயத்தின்திருப்பாவை சமுத்திர தீர்த்தோற்சவம் நேற்று திங்கட்கிழமை குருக்கள்மடம் கடலில் நடைபெற்றது.

மாதங்களில் மார்கழி நானே என கிருஷ்ண பகவானின் முக்கிய விரதங்களுள் ஒன்றாக கருதப்படுகின்ற திருப்பாவை விரதம் கடந்த டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகியது. இதில் குறிப்பாக அதிகாலையில் திருப்பாவை என்பன பாடப்பட்டு, அதிகாலையில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறுவது வழக்கமாகும்.

விரதங்களில் சிறந்த விரதமாக கருதப்படும் சொர்க்கவாயில் வைகுண்ட ஏகாதசி விரதம் நடைபெற்று, 30 நாட்கள் திருப்பாவை பெருவிழா நடைபெற்று சமுத்ர தீர்த்தோற்சவத்துடன் இனிதே நிறைவு பெற்றது.

கிரியை நிகழ்வுகள் யாவும் சோமேஸ்வரம் குருக்கள் தலைமை மையில் இடம்பெற்றதுடன் இதில் அப்பகுதியைச் சேர்ந்த கிருஷ்ன பக்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

# அதிகரிக்கப்பட்ட ஆதனவரி அறிவிடுவதை உடன் நிறுத்தவும்

## ஏறாவூர் நகர சபை செயலாளருக்கு பணிப்பு

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

அதிகரிக்கப்பட்ட ஆதனவரி அறிவிடுவதை உடனடியாக நிறுத்துமாறு ஏறாவூர் நகர சபைச் செயலாளருக்கு மட்டக்களப்பு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். பார்த்தீபனால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் வழமையாக இருந்து வந்த வரி அறவீட்டை அதிகரிக்கும் வகையில் ஏறாவூர் நகர சபைச் செயலாளரினால் முன்னெடுக்கப்பட்டு வந்த நடவடிக்கையை உடனடியாக நிறுத்துமாறு உத்தரவிடக் கோரி ஜனநாயக மக்கள் கட்சியின் பொதுச் செயலாளர் எம். அப்துல் வாஜித், கிழக்கு மாகாண ஆளுநர், முதலைமச்சுச் செயலாளர், மட்டக்களப்பு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தார்.

எனவே தாங்கள் இவ்வாண்டு அதன் வரி அறவீட்டின் அதிகரிப்பிற்கு ஏறாவூர் நகர சபைக்கு அனுமதி வழக்கவில்லையாயின் உடனடியாக இவ்விடயத்தில் கவனம் செலுத்தி ஆதன வரி அதிகரிப்பை இடை நிறுத்துவதுடன் எதிர்வரும் ஆண்டுகளில் நகர சபை கட்டளைச் சட்டங்களை முறையாக பின்பற்றி வரிகளை அறவிடுவதற்கு ஏறாவூர் நகர சபைக்கு அறிவுறுத்தல் வழங்குமாறு தயவாய் கேட்டுக்கொள்கின்றேன்." என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது

# டிஜிட்டல் மயமான காத்தான்குடி ஆதார வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு

காத்தான்குடி நிருபர்

காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு டிஜிட்டல் மயப்படுத்தப்பட்டுள்ளதாக காத்தான்குடி ஆதார வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் எம்.எஸ்.எம் ஜாபீர் தெரிவித்தார்.

காத்தான்குடி ஆதார வைத்திய சலையில் வெளிநோயாளர் நோயாளர் பிரிவுக்கு சிகிச்சைக்காக வருகை தரும் நோயாளர்களினா விபரங்கள் பெற்றுக் கொள்வதற்கான டிஜிட்டல் தொழில்நுட்பம் பயன் படுத்தப் படுவதுடன் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இந்த வைத்தியசாலையில் மகப்பேற்று வைத்திய நிபுணர் பொது வைத்திய நிபுணர் உட்பட வைத்திய நிபுணர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த வைத்தியசாலையில் தினமும் வெளிநோயாளர் பிரிவு மாலை 6மணி வரை திறந்திருக்கும்

சத்தியத்தின் வாசல் எனப்படும் நோயாளர் பாதுகாப்பு மற்றும் சுகாதார தகவல் மையமும் இங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக ஒரு தாதி உத்தியோகத் தரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்.

# தீகவாபியில் மத்தியஸ்த விழிப்புணர்வு பயிற்சிப் பட்டறை

(அக்கரைப்பற்று நிருபர்)

தீகவாபி சமுர்த்திஅபிவிருந்திச் சங்க உறுப்பினர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட மத்தியஸ்த விழிப்புணர்வு பயிற்சிப் பட்டறை தீகவாபியில் நடைபெற்றது.

சமுர்த்தி வங்கி முகாமையாளர் ரீ.கே.. றஹ்மதுல்லா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தீகவாபி கிராம சேவகர் பிரிவிலுள்ள பெருந் தொகையான கிராமவாசிகள் கலந்து கொண்டனர்.

பிரதம அதிதியாக கலந்துகொண்ட அட்டாளைச்சேனை மத்தியஸ்த சபை தலைவர் ஐ.எல்.ஹாஷிம் கலந்து கொண்டார்.



தலைமை உரை நிகழ்த்திய சமுர்த்தி வங்கி முகாமையாளர் றஹ்மதுல்லா பேசுகையில் சங்க அங்கத்தவர்கள் பெற்ற கடன்களை நீண்டகாலமாக செலுத்தாதிருப்பது கிராமத்தின் நிதிவளத்தை பாதிப்பை ஏற்படுத்துகிறது. கிராம மட்டத்தில் முதலீட்டையும் பாதிக்கிறது. அத்தோடு இது கிராம வருமானத்தையும் வேலையின்மையையும் பெரிதும் பாதிக்கி ன்றது. இது விடயத்தில் அங்கத்தவர்கள் கூடிய கவனம் செலுத்தவேண்டுமெனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பரிவாரசைத்திய விகாராதிபதி வன சத்தானந்த தேரோ சிறப்பு அதிதியாக கலந்து கொண்டார்.

# அக்கரைப்பற்றில் கடற்கரையை துப்புரவு செய்த இராணுவ காலாட்படைப் பிரிவு





(அக்கரைப்பற்று நிருபர்)

அக்கரைப்பற்றிலுள்ள இராணுவ 241காலாட்படைப் பிரிவு வீரர்கள் ஜனாதிபதியின் தூய்மையான நாட்டைக்கட்டி எழுப்பும் தேசிய வேலைத் திட்டத்திற்கமைவாக அக்கரைப்பற்று கடற்கரைப் பிரதேசத்தை சுத்தம் செய்து கொட்டும் மழைக்கு மத்தியிலும் முழு மூச்சாக ஈடுபட்டனர்.

கடந்த 2012ம் ஆண்டிலிருந்து இந்தப்பணியில் ஈடுபட்டுவரும் அக்கரைப்பற்று சன்றைஸ் கழகத்தினர் படையினருக்கான சகல ஒத்துழைப்புகளையும் வழங்கினர். மேஜர் ஜானக சுபசிங்க தலைமையிலான வீரர்கள் கடற்கரை ஓரங்களில் காணப்பட்ட கழிவுகளை குப்பைகளையும் ஒன்று சேர்த்தனர்.

அக்கரைப்பற்று மாநகர சபையினர், கல்முனை-அக்கரைப்பற்று சாரணர் சங்கத்தினர், மற்றும் வோக்கேர்ஸ் யூனியன் உறுப்பினர்கள் மற்றும் சிவில் சமுக உறுப்பினர்கள் போன்றோர் இந்தப்பணியில் மழை என்றும் பாராது குப்பை கூளங்கள் உட்பட வெற்றுப் போத்தல்கள் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகள் போன்றவைகளையும் துப்புரவு செய்தனர்.

அக்கரைப்பற்று "ஜீனியஸ் மெடிக்கல்ஸ்" நிறுவனத்தினர் தொண்டர் களுக்கான நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். மாநகர கால்நடை வைத்திய அதிகாரி டொக்டர் சமீனா ஹம்தூன், சன்றைஸ் கழகத்தின் தலைவர் எம்.ஜெயினுதீன், ஜீனியஸ் மெடிக்கல்ஸ் நிறுவன முகாமைத்துவப் பணிப்பார் டொக்டர் ரீ.எஸ்.ரீ..ஆர். ரஜாப், கல்முனை-அக்கரைப்பற்று மாவட்ட சாரணசங்க ஆணையாளர் எம்.ஐ உதுமாலெவ்வை ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்

# கந்தளாயில் பணம், நகை கொள்ளை; நால்வர் பொலிஸாரால் கைது

(கியாஸ் ஷாபி )

கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 91 ஆம் மைக்கல் சந்தியிலுள்ள வீடொன்றில் பணம் மற்றும் 34 பவுண் தங்க நகைகளைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ள சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட நான்கு பேரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, கடந்த நான்காம் திகதி நான்கு பேர் கொண்ட குழுவினர், அதிகாலை 1-30 மணியளவில் குறித்த, வீட்டிற்குள் புகுந்து கணவனை சரமாரியாக தாக்கி விட்டு, மனைவியை கட்டிப்போட்டு, அலுமாரியில் இருந்த பணம் மற்றும் 34 பவுண் தங்க நகைகளைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இந்தக் கொள்ளை தொடர்பில் பொலிஸார் மேற் கொண்ட நடவடிக்கையின் காரணமாக கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட நான்கு பேரை ஞாயிற்றுக்கிழமை (12) பொலிஸார் கைது செய்தனர்.

# நிந்தவூர் பிரதேச சபை வளாகத்தில் கிளீன் ஸ்ரீலங்கா நிகழ்வு

(எஸ்.எம்.அறூஸ்)



அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசத்தின் கிளீன் ஸ்ரீலங்கா நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை நிந்தவூர் பிரதேச சபை வளாகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிந்தவூர் பிரதேச சபையின் செயலாளர் எஸ்.சிஹாபுதீன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்ற இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

கௌரவ அதிதிகளாக, திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்ரப் தாஹீர், நிந்தவூர் பிரதேச செயலாளர் அப்துல் லத்தீப், தேசிய மக்கள் சக்தியின் நிந்தவூர் பொறுப்பாளர் சம்சுல் அலி, நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் எஸ்.எம்.ஆரீப் உட்பட பிரதேச சபை உத்தியோகத்தர்கள், கட்சி முக்கியஸ்தர்கள், பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.அதம்பாவா வினால் தேசியக்கொடி ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் தொடர்பில் தெளிவான விளக்கத்தையும் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவா வழங்கினார்.

# உலர் உணவுப் பொதி வழங்கும் நிகழ்வு

(ருத்ரா)




கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான 2 மில்லியன் பெறுமதியிலான உலர் உணவுப் பொதி வழங்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (12) வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் நடைபெற்றது.

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் மாவட்டம் 306, சி 2 இன் ஏற்பாட்டில் கிடைக்கப்பெற்ற உதவியின் அடிப்படையில் மாற்றுத்திறனாளிகள் உட்பட பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள்,புதிய ஆடைகள், நவீன சமையல் அடுப்புக்கள் மற்றும் சமைத்த உணவுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

மாங்கேணி,கிருமிச்சை,பணிச்சங்கேணி,வாகரை,தட்டுமனை, கதிரவெளி,புனாணை என பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட பயணாளிகளுக்கு இவ்வுதவி வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் மாவட்ட ஆளுநர் லயன் ரஞ்சித் பெணான்டோ, டி 10 மாவட்டத்திற்கான ஆளுநர் லயன் ஆதித்தன், டி10. மாவட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட வருங்கால ஆளுநர் லயன் கே.லோகேந்திரன், எல் சி எப் இணைப்பாளர் லயன் லலித்குமார் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

# கள உத்தியோகத்தர்களை பயிற்றுவிக்கும் செயலமர்வு






(எஸ்.எம்.அறூஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலக சமுர்த்தி பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட, குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கான வேலைத் திட்டம் தொடர்பாக அனைத்து கள உத்தியோகத்தர்களையும் பிரதேச செயலக மட்டத்தில் பயிற்றுவிக்கும் செயலமர்வு பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.எம்.ஹமீட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் நஸீல் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

வளவாளராக சம்மாந்துறை பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.பீ.எம்.ஹுசைன் கலந்து கொண்டு விளக்க மளித்தார்.

இச்செயலமர்வில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அப்துல் மஜீட், திட்ட முகாமையாளர் எஸ்.எல். அஸீஸ், வங்கி முகாமையாளர்கள் உள்ளிட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பிரதேச செயலக துறை சார்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# தலதா மாளிகையில் புத்தரிசி விழா



(எம்.ஏ.அமீனுல்லா)

கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் நேற்று (13) புத்தரிசி விழா இடம் பெற்றது.

கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் தியவதன நிலமே பிரதீப் நிலங்க தெல மற்றும் பல முக்கிய பௌத்த மத பெரியார்கள் தலைமையில் நேற்று இவ்விழா இடம்பெற்றது.

ஸ்ரீ தலதா மாளிகையை மையமாக வைத்து ஆண்டு தோறும் நடத்தப்படும் நான்கு முக்கிய திருவிழாக்களில் முதன்மையானது. இந்த புத்தரிசி விழாவாகும். வருடந்தோறும் பௌர்ணமி தினத்தை மையப் படுத்தி கொண்டாடுவது பழங்காலத் திலிருந்தே இருந்து வரும் பாரம் பரியமாகும்.

ஸ்ரீ தலதா மாளிகைக்கு சொந்தமான நெல் வயல்களின் அறுவடை செய்யப்பட்டுள்ள நெல்லின் முதற் பகுதியை புத்த பெருமானுக்கு காணிக்கையாக செலுத்தும் வருடாந்த நிகழ்வே நேற்று இடம்பெற்ற இந்த புத்தரிசி விழாவாகும்.

ஸ்ரீ தலதா மாளிகைக்கு சொந்தமான வயல்களில் அறுவடை செய்யப்பட்ட முதல் அறுவடையை பல்லே கலையில் உள்ள ஸ்ரீ தலதா மாளிகையின் நெல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டு, விழாவிற்கு ஒரு வாரத்திற்கு முன்பு பல்லேகலையில் இருந்து நெல் மற்றும் புது அரிசியை யானைகளுடன் ஊர்வல மாக தலதா மாளிகைக்கு கொண்டு வருவதும் பழங்கால வழக்கமாகும்.

# தைப்பொங்கல் தமிழ்ச் சமுதாயத்தின் தலைசிறந்த பண்பாட்டை உலகுக்கு உணர்த்திடும் திருநாளாகும்!

## இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான் பொங்கல் வாழ்த்து



உலகெங்கும் வாழும் தமிழர்கள் உள்ளம் மகிழ்ந்து கொண்டாடும் உழவர் திருநாளாம் பொங்கல் திருநாளில், அனைவருக்கும் எனது இதயம் கனிந்த இனிய பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன் என இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உழவர் பெருங்குடி மக்கள் நன்றி தெரிவித்து வணங்கி மகிழும் இனிய திருவிழாவாகவும், மனிதனுக்கும் இயற்கையின் கொடைகளுக்கும் இடையிலான பரஸ்பர உடன்படிக்கையை புதுப்பிக்கும் கலாசாரப் பண்டிகை யான தைப்பொங்கல் தமிழ்ச் சமுதாயத்தின் தலைசிறந்த பண்பாட்டை உலகுக்கு உணர்த் திடும் திருவிழாவாகவும் ஆண்டு தோறும் கொண்டாடப்படுகிறது.

உலக வாழ் தமிழ் மக்கள் தொன்று தொட்டு மேற்கொண்டு வரும் சூரிய பகவான் மீதான வழிபாட்டின் வெளிப்பாடாகவும் தைப்பொங்கல் இருந்து வருகின்றது.

“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம், தொழு துண்டு பின் செல்பவர்” என்ற குறளில் வள்ளுவப் பெருந்தகை, உழவுத் தொழில் செய்து வாழ்கின்ற வரே சுய சார்போடு வாழ்கின்ற பெருமையுடையவர்கள் என்னும் பொருள்பட, உழவுத் தொழிலின் மேன்மையினை உலகத்தோர்க்கு உணர்த்தியுள்ளார்.

அத்தகைய சிறப்புமிக்க உழவர் பெருமக்கள் தமது வேளாண் நிலங்களில் சாகுபடி செய்யும் விளை பொருட்களின் உற்பத்திக்கு ஆதாரமாக விளங்கும் இறைவனை வணங்கியும், தம்மோடு சேர்ந்து உழைத்து தம் வருமானத்திற்கு அச்சாரமாகத் திகழ்கின்ற கால்நடைகளுக்கு, தமது நன்றியை யும், மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் நாள் பொங்கல் திருநாளாகும்.

அனைவருக்கும் மகிழ்ச்சி தருகின்ற அறுவடைத் திருநாளாம் இப்பொங்கல் திருநாளில் தமிழர்களின் வாழ்வில் நலமும், வளமும் பெருகி, அமைதியும் இன்பமும் நிலைக்கட்டும் எனவும் அவர் தனது வாழ்த்தில் தெரிவித்துள்ளார்.

# வவுனியாவில் ஔவையார் நினைவு தினம்



(கி.வசந்தன்)

ஔவையாரின் நினைவு தினம் வவுனியா, சின்னப்புதுக்குளம், மாமடுவ சந்தியிலுள்ள ஔவையாரின் சிலையடியில் நேற்று நடைபெற்றது.

இதன்போது ஔவையாரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மலர் அஞ்சலியும் செய்யப்பட்டிருந்ததுடன் தமிழ்மணி அகளங்கன் மற்றும் மாணவர்களால் நினைவு பேருரைகளும் நடைபெற்றன.

வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திர குமார் கண்ணன் தலைமை யில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், சமூக ஆர்வல ர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# மாத்தளையில் இலவச மருத்துவ முகாம்







(எம்.சதூர்தீன்)

மாத்தளை சுவாமி விபுலானந்தர் கலா மன்றத்தின் ஏற்பாட்டில் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மன்றத்தின் அனுசரணையுடன் 30ஆவது இலவச மருத்துவ முகாம் ஒன்று மேற்படி தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் நேற்று முன்தினம்(12) இடம்பெற்றது. இதன்போது கண்பார்வை குறைந்தோர் 200 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டதுடன் மாத்தளை, கண்டி,மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த 10 விசேட வைத்தியர்களால் பல்வேறு நோய்களுக்கான நோயாளிகளுக்கு இலவச சிகிச்சையும் இங்கு அளிக்கப்பட்டது. இந்த மருத்துவ முகாமில் சுமார் 1000 பேர் கலந்து கொண்டு பயனடைந்துள்ளனர் என மேற்படி மன்றத்தின் செயலாளர் த.சத்தியசீலன் தெரிவித்தார்.

# வவுனியா கூட்டுறவுச் சங்கத்தால் 125 ரூபாவுக்கு நெல் கொள்வனவு

(கி.வசந்தன்)

வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தால் உலர்ந்த நெல்லை கிலோ ஒன்றுக்கு 125 ரூபா வீதம் கொள்வனவு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகச் சங்கத்தின் தலைவர் ந. ஸ்ரீஸ்கந்தராஜா தெரிவித்தார்

இது தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

தற்போதைய காலபோக நெற்செய்கை அறுவடை ஆரம்பித்துள்ளது. இந்நிலையில் எமது விவசாயிகளின் நன்மை கருதியும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களால் விவசாயிகளுக்குச் செய்யக்கூடிய உதவியாகவும் உலர்ந்த நெல்லை கிலோ ஒன்றுக்கு 125 ரூபா வீதமும், காயாத நெல்லை 115 ரூபாய் வீதம் கொள்வனவு செய்வதற்கு வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் தீர்மானித்துள்ளது.

பொங்கலுக்குப் பின்னர் வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் நெல்லை கொள்வனவு செய்ய உள்ளது.

விவசாயிகள் வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு நெல்லை வழங்க விரும்பின் ஓமந்தை, ஆறுமுகத்தான்புதுக்குளம், கல்நாட்டியகுளம், ஈச்சங்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் களஞ்சியசாலைகளில் நெல்லை கையளிப்பதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை, வவுனியாவின் சங்கத்திற்குரிய கட்டடங்களிலும் நெல்லை களஞ்சியப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதன் காரணமாக சுமார் 2,700 மெட்ரிக் தொன்னுக்கும் அதிகமான நெல்லை இம்முறை வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் கொள்வனவு செய்வதற்குத் தீர்மானித்துள்ளது.





*பிறைட் சமூக அபிவிருத்தி அறக்கட்டளையின் ஊடாக பாமஸ்டன் ரட்ணகிரிய (லிந்துலை பகுதியிலுள்ள) சிறுவர் பராமரிப்பு நிலையத்திலுள்ள சிறார்களுக்கு இலவசமாக தண்ணீர் போத்தல்கள், சாப்பாட்டு பெட்டிகள் என்பன வழங்கி வைக்கப்பட்டன. இப்பொதிகள் வன்னி ஹோப் நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளர் நகுலேஸ்வரனால் வழங்கி வைக்கப்பட்டன.* **(படங்கள் : பி.கேதீஸ்)**

# அதிபர் சேவையிலிருந்து ஓய்வு



(தலவாக்கலை நிருபர்)

நுவரெலியா கல்வி வலயத்திற் குட்பட்ட தலவாக்கலை ட்றூப் பாடசாலையின் அதிபராக கடமையாற் றிய செல்லையா ஜெகதீஸ்வரன் தனது 35 வருட கல்வி சேவை யிலிருந்து அண்மையில் ஓய்வு பெற்றார். இவருக்கு பாடசாலை சமூகத்தினரால் சேவைநலன் பாராட்டு விழா நடத்தப்பட்டது. நுவரெலியா கெலேகாலவை பிறப்பிடமாகவும் தலவாக்கலை நகரை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தனது ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி மற்றும் உயர் கல்வியை நுவரெலியா பரிசுத்த திருத்துவ கல்லூரியில் கற்றார். 1989 ஆம் ஆண்டு ஆசிரியர் தொழிலில் இணைந்து கொண்ட இவர் நுவரெலியா பரிசுத்த திருத்துவ கல்லூ ரியில் கடமையாற்றினார். பின்னர் 1993 ஆம் ஆண்டு கொட்டகலை யதன்சைட் அரசினர் ஆசிரியர் பயிற்சி கலாச்சாலையில் ஆசிரியர் பயிற்சியினை பெற்று ஆரம்ப பிரிவு பாட ஆசிரியரானார். நுவரெலியா பரிசுத்த திருத்துவ கல்லூரியில் ஆசிரியராக கடமையாற்றிய இவர் 2000 ஆம் ஆண்டு தலவாக்கலை ட்றூப் தமிழ் மகா வித்தியாலயத்திற்கு ஆசிரியராக இடமாற்றம் பெற்றுச் சென்றார். அங்கு ஆசிரியராக கடமையாற்றிய இவர் 2005 ஆம் ஆண்டு அதே பாடசாலைக்கு அதிபராக நியமிக்கப்பட்டார். பின்னர் 2012 ஆம் ஆண்டு இலங்கை அதிபர் சேவையில் இணைந்துகொண்ட இவர் ஓய்வுபெறும் வரை அங்கு அதிபராக கடமையாற்றினார்.

# பொங்கல் எம்மில் பல மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்



(பி.கேதீஸ்)

தைத் திருநாளாம் தைப்பொங்கலை கோலாகலமாக கொண்டாடும் அனைத்து இந்து பெரு மக்களுக்கும் உளம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் நான் பெரும் மகிழ்ச் சியடைகின்றேன் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பின ருமான மருதபாண்டி ரமேஸ்வரன் தைத் திருநாள் வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழர்களின் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உழவர்களின் அறுவடைத் திருநாளாம் தைத்திருநாள் அன்று மகர சங்கராத்தியம் கொண்டாடப்படுகின்றது. சூரியனின் வடக்கிலிருந்து தெற்கு நோக்கிய பயணம்தான் மகர சங்கராத்தியம் என்று சொல்லுகின்றார்கள். எமக்கு மழையையும் வெயிலையும் கொடுத்து உதவுகின்ற சூரியனுக்கு சூரியப் பொங்கல் வைத்து நன்றி செலுத்துகின்ற ஒரு திருநாளாக இத் தைப்பொங்கல் அமைகின் றது. பொங்கல் பொங்கி வருகின்ற போது நாம் அனைவரும் சௌப்பாக்கியமாக வாழ்வதாக ஐதீகம் சொல்லுகின்றது. பொங்கல் பலவிதமானது கோலிப் பண்டிகை, தைப்பொங்கல், மாட்டுப்பொங்கல், கானும் பொங்கல் என பல வித மான பொங்கல்களை கொண் டாடுகின்றோம் எனவே தொழிலா ளர்களின் வாழ்க்கையில் தீமைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து ஒவ்வொரு வரதும் ஆக்கபூர்வமான நடவடிக்கைக ளையும் அழுத்தங் களையும் வெற்றி பெறச்செய்து எம்மில் பல நல்ல வகையான மாற்றங்களை ஏற்படுத்திக்கொடுக்கவும் மேலும் மக்களிடையே புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு போன்ற எண்ணங்கள் உருவாகி எமது மக்கள் சிறப்பாக வாழ்வதற்கு எல்லா வல்ல இறைவனை பிரார்த் திப்போம் என தெரிவித்துள்ளார்.









*வலப்பனை கல்வி வலயத்திற்குட்பட்ட மந்திரிதென்ன விடுதுகல சிங்கள பாடசாலையில் கடந்த வியாழக்கிழமை தைப்பொங்கல் விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. பாடசாலையின் அதிபர் ஜமுனாகுமாரி தலைமையில் முழு பாடசாலை சமூகமும் தமிழ் கலாச்சார உடைகளை அணிந்து தமிழ் கலாச்சாரத்துடன் தைப்பொங்கல் விழாவை கொண்டாடினர். ஒரு சிங்கள பாடசாலையில் தைப்பொங்கல் விழா இவ்வாறு மிகச் சிறப்பாக நடைபெற்றதை ஒரு முன்மாதிரியான செயற்பாடாக கருதுவதாக அனைத்து கல்வி சமூகத்தினரும் பாராட்டுகின்றனர்.* **(படங்கள் : பி.கேதீஸ்)**

# கிழக்கில் 161 பாடசாலைகளுக்கான அதிபர் வெற்றிடங்களை நிரப்ப ஏற்பாடு

(முகமட் முக்தார்)

கிழக்கு மாகாணத்திலுள்ள 161 பாடசாலைகளிலுள்ள பாடசாலை அதிபர் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களை கிழக்கு மாகாண கல்வி அமைச்சு கோரியுள்ளது.

இது தொடர்பான சுற்றுநிருபம் மற்றும் அறிவுறுத்தல்கள் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர்.கே.குணநாதன் கிழக்கு வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள 1AB,1Cதரப் பாடசாலைகளுக்கான அதிபர்களை நியமிக்கும் நியமன அதிகாரி என்ற வகையில் கிழக்கு மாகாண கல்விச் செயலாளர் ஆவார்.

இத்திட்டத்தின் கீழ் திருமலை மாவட்டத்தில் திருமலையில் 15, கிண்ணியாவில் 16, மூதூரில்13, கந்தளாயில்09, திருகோணமலை வடக்கில் 05, பாடசாலைகளுக்கும் கல்முனை கல்வி மாவட்டத்தில் கல்முனையில்06, அக்கரைப் பற்றில் 04, சம்மாந்துறையில் 08, திருக்கோவில் 09 பாடசாலைகளுக்கும் அம்பாறை கல்வி மாவட்டத்தில் அம்பாறை- 07, தெகியத்தகண்டிய-03, மகாஓய-04 பாடசாலைகளுக்கும்

மட்டக்களப்பு கல்வி மாவட்டத்தில் மட்டக்களப்பு-07, கல்குடா-14, மட்டக்களப்பு மத்தி-11, மட்டக்களப்பு மேற்கு-14, பட்டிருப்பு-15 பாடசாலைகளுக்கும் இவ்வாறு அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை அதிபர் சேவை முதலாம், இரண்டாம், மூன்றாம் தரத்தினர் இதற்கான விண்ணப்பங்களை இம்மாதம் 30 ம் திகதி வரை தமது வலய கல்விப்பணிப்பாளர்கள் ஊடாக விண்ணப்பிக்கலாம்.முதலாம் வகுப்பினர் நிரந்தரமாகவும் ஏனையோர் பதிற்கடமை அடிப்படையிலும் நியமனம் பெறுவர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் அரசியல் அழுத்தங்கள் காரணமாக இவ்வதிபர் பதவிகள் நிரப்பப்பட வில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

# ஓய்வூதியக்காரர்களுக்கு ஒன்லைன் புகையிரத ஆசனப் பதிவு

(முகம்மட் முக்தார்)

அரச சேவை ஓய்வூதியர்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் ஒன்லைன் முறையிலான புகையிரத ஆணைச்சீட்டுக்கு வழங்கும் முறைமை, இம்மாதம் 17 ஆம் திகதி முதல் மேலும் மேம்படுத்தப்படுவதாக ஓய்வூதிய திணைக்களம் அறிவித்துள்ளது.

இனிமேல் அரச, ஓய்வூதியர்கள் இலவச புகையிரத ஆணைச்சீட்டை பெற பிரதேச செயலகத்திற்கு வருகைதராது வீட்டிலிருந்தவாறே அவர்கள் ஒன்லைன் மூலமாக புகையிரத ஆணைச்சீட்டினை பெற்றுக் கொள்வதற்கும், ஆசனப் பதிவினை மேற்கொள்வதற்கும் வசதிகள் வழங்கப்படுகின்றன.

திட்டமிட்டவாறு பயணம் செய்யாதவிடத்து மீண்டும் ஒன்லைன் மூலம் இரத்துச் செய்து கொள்வதற்குமான வசதிகளும் வழங்கப்படவிருக்கின்றது.

இதற்காக அரச ஓய்வூதியர்கள் அனைவரும் மீண்டும் ஓய்வூதிய திணைக்களத்தின் gp b7 எனும் படிவத்தினை பூரணப்படுத்தி பிரதேச செயலகத்தில் கையளிக்க வேண்டும்.

ஓய்வூதிய திணைக்களத்தின் gp b7 எனப்படும் படிவம் தற்போது ஓய்வூதியர்கள் தமது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## முன்னாள் எம்.பி ராஜிதவினால் பள்ளிவாசல்களுக்கு கதிரைகள் அன்பளிப்பு



(பீ.எம் முக்தார்)

பேருவளை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பள்ளிவாசல்கள், அரபுக் கல்லூரி, அஹதிய்யா பாடசாலைகளுக்கு கதிரைத் தொகுதிகளைக் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

பேருவளை மஹகொட அஹதிய்யா பாடசாலையின் தலைவர் எம். ரியாஸ்தீன் இமாம்தீனின் வேண்டுகோளின் பேரில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன இதற்கான நிதியை பெற்றுக் கொடுத்துள்ளார்.

இந்தக் கதிரை தொகுதி கையளிக்கும் வைபவங்கள் சீனன்கோட்டை, ஜாமியத்துல் பாஸியா கலா பீடத்திலும், சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரியிலும் இடம் பெற்றது. முன்னாள் எம்.பி ராஜித சேனாரத்ன கலந்து கொண்டு அவற்றை கையளித்தார்.

ஜாமியத்துல் பாஸியத்துஷ் ஷாதுலியா கலாபீடத்திற்கான பிளாஸ்டிக் கதிரை தொகுதியை அதிபர் அல்-உஸ்தாத் எம். அஸ்மிகான் (முஅய்யிதி) யிடமும் நளீம் ஹாஜியார் அஹதிய்யா பாடசாலைக்கான கதிரை தொகுதியை அதிபர் பௌஸியா அனஸிடமும் கையளித்தார்.

பள்ளிவாசல்கள், அரபுக் கல்லூரி, அஹதிய்யா பாடசாலைகளுக்கு கதிரைத் தொகுதியை பெற்றுக் கொடுக்க நிதி ஒதுக்கிய முன்னாள் எம்.பி டொக்டர். ராஜித சேனாரத்னவுக்கு நிகழ்வில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

## சம்மாந்துறையில் மின்சாரம் தாக்கி ஒருவர் மரணம்!

(கே.எ.ஹமீட்)

வீட்டில் வேலை செய்து கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று திங்கட்கிழமை (13) இடம்பெற்றுள்ளது.

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு சென்னக்கிராமம் பகுதியில் வீட்டுவேலை செய்துகொண்டிருந்த போது திடீரென மின்சாரம் தாக்கி மலையடிக்கிராமம் 03 பகுதியைச் சேர்ந்த (வயது 60) என்பவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சமூக ஒழுங்கு அமைப்பினர் பிரதி அமைச்சரிடம் மகஜர் கையளிப்பு



சமூக ஒழுங்கு அமைப்பு (SOCIAL REGULATORS) அமைப்பின் தலைவர் முனவ்வர் ஹஸன் மற்றும் செயலாளர் ஷிஹாப்தீன் ஆகி யோரினால், தேர்தல் ஆணையாளரிடம் கடந்த வாரம் கையளித்த மகஜரின் பிரதியொன்றை பிரதி அமைச்சர் முனீர் முலாபரிடம் வெள்ளிக்கிழமை கையளித்தனர்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலை எதிர்வரும் மார்ச் மாதம் நடாத்தப்படலாமென தெரிவிக்கப்பட்டதை மீள் பரிசீலனை செய்யுமாறு அந்த மகஜர் மூலம் சமூக ஒழுங்கு அமைப்பு கேட்டுள்ளது.

அதாவது எதிர்வரும் மார்ச் மாதம் முஸ்லிம்களின் நோன்பு மாதம் என்பதால் தேர்தலை எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடத்தலாமென சமூக ஒழுங்கு அமைப்பு கேட்டுள்ளது.

## பொலிஸாருக்கு கிடைத்த போலி அழைப்புக்கள்; சந்தேக நபர் கைது

(எம்.ரீ.ஆரிப் )

பொலிஸ் தலைமையக 119 அவசர இலக்கத்திற்கு 12 போலி அழைப்புக்களை மேற்கொண்டு பொலிஸாரை தவறாக வழிநடத்த முயற்சித்த சந்தேக நபர் ஒருவரை கைது செய்யுமாறு அநுராதபுரம் பிரதான நீதிவான் நீதிமன்றம் திறப்பனை பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

திறப்பனை பதிஸ்ரம்பேவ பகுதியில் வசித்து வரும் ஒருவரை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்த உத்தரவிட்டுள்ளது.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி பொலிஸ் தலைமையக 119 அவசர அழைப்பு தொடர்பாடல் நிலையத்திற்கு சந்தேக நபர் 12 தொலைபேசி அழைப்புக்களை செய்துள்ளதாக பொலிசார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

## பாண்டிருப்பில் திருவாசக முற்றோதல்

(செ.துஜியந்தன்)

திருவாசக முற்றோதல் பாண்டியுப்பு ஸ்ரீ மாணிக் கப்பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்றது.

கல்முனைப்பிராந்திய சிவசங்கிரி திருமுறை ஓதுவோர் சங்கம் ஆலய அறங்காவல சபையோடு இணைந்து இவ் திருவாசகம் முற்றோதுதல் நிகழ்வை ஏற்பாடு செய்து பிரதேசத்திலுள்ள இந்து ஆலயங்களில் நடத்திவருகின்றது.

இங்கு மாணிக்கவாசகர் அருளிச் செய்த 51பதிகங்கள் ஓதுவோர்களினால் ஓதப்பட்டது. மாணிக்கப்பிள்ளையார் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ இராசசிங்கம் குருக்கள் தலைமையில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றன.



## நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறப்பு

(எம்.ரீ.ஆரிப் )


அநுராதபுரம் மாவட்டத்தில் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுள்ள 14 பிரதான நீர்த்தேக்கங்களில் 09 நீர்த்தேக்கங்கள் வழிந்து வருவதாக நீர்ப்பாசன திணைக்களத்தின் அநுராதபுரம் வலய நீர்ப்பாசன பணிப்பாளர் ஜெயந்த டீ சில்வா தெரிவித்தார்.

தற்போது பெய்து வரும் மழை காரணமாக இந்த பிரதான நீர்த்தேக்கங் களில் இருந்து நீரை வெளியேற்றுவதற்காக வான் கதவுகள் திறக்கப்பட்டு ள்ளதாவும் வலய பணிப்பாளர் தெரிவித்தார்.

இதன்படி நாச்சியாதீவு நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் தலா நான்கு அடியிலும் இரண்டு வான் கதவுகள் தலா இரண்டு அடியிலும் மூன்று கதவுகள் இரண்டு அடியிலும் திறக்கப்பட்டுள் ளன.

இராஜாங் கனை நீர்த்தேக்கத்தில் தலா இரண்டு அடிக்கு இரண்டு வான் கதவுகளும் மஹாவிலச்சிய நீர்த்தேக்கத்தில் இரண்டு வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன.

மஹாகனந்தராவ நீர்த்தேக்கத்தில் தலா ஒரு அடி



மற்றும் இரண்டு அடியிலும் திறக்கப்பட்டுள்ளன.அபய வாவி, துருவில நீர்த்தேக்கம் மற்றும் திசாவாவி, நுவர வாவி தலா இரண்டு அடியிலும் திறக் கப்பட்டுள்ளதுடன் கலாவாவியின் இரண்டு வான் கதவுகள் இரண்டு அடியிலும் திறக்கப்பட்டுள்ளன.

## மட்டு. மாவட்ட சமாதான நீதிவான்கள் சமூக மேம்பாட்டு மையத்தின் தலைவராக உதயகாந்த்



மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதிவான்கள் சமூக மேம்பாட்டு மையத்தின் தலைவராக சிரஷ்ட ஊடகவியலாளரும் சமூக செயற்பாட்டாளருமாகிய சாமஸ்ரீ தேசமானிய உதயகுமார் உதயகாந்த் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சமாதான நீதிவான்களுக்கான கருத்தரங்கும் குறித்த சம்மேளனத்தின் பொதுக்கூட்டமும் சனிக்கிழமை மண்முனைப்பற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அதன் தலைவர் பாவலர் சாந்தி முகைதீன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக மண்முனைப்பற்று – ஆரையம்பதி பிரதேச செயலாளர் திருமதி தெட்சணகௌரிக்ஸ் கலந்து சிறப்பித்ததுடன், இந்நிகழ்விற்கு வளவாளர்களாக சட்டத்தரணி எம்.எஸ்.எம்.முகைதீன் சாலி, சம்மேளனத்தின் ஆலோசகர் வீ.கமலதாஸ் ஆகியோர் கலந்து கொண்டு வளவாண்மை மேற்கொண்டிருந்தனர்.

சமாதான நீதிவான்களுக்கான கருத்தரங்கு நிறைவுற்றதும், சம்மேளனத்தின் பொதுக்கூட்டமும் நிருவாகத் தெரிவும் இடம்பெற்றன.

சம்மேளனத்தின் புதிய தலைவராக பலத்த போட்டிக்கு மத்தியில் வாக்கெடுப்பின் மூலம் சிரேஷ்ட ஊடகவியலாளரும் அகில இலங்கை சமாதான நீதிவானுமாகிய உதயகுமார் உதயகாந்த் அதிகப்படியான வாக்கு வித்தியாசத்தில் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து சம்மேளனத்தின் புதிய செயலாளராக துரைராஜா லெட்சுமிகாந்தன் ஏகமனதாக சபையோரினால் தெரிவு செய்யப்பட்டார். அத்தோடு பொருளாளராக ஆயுள்வேத வைத்தியர் சபாரெத்தினம் சுதர்சன், உபதலைவராக எம்.வை.ஆதம், உபசெயலாளராக அருணாசலம் செல்வேந்திரன் ஆகியோரும், நிருவாக சபை உறுப்பினர்களாக இ.கோமலேஸ்வரி, கே.சதீஸ்க்குமார், ரீ.தயானந்தம், கே.தவராசா, கே.நடேசன், எம்.எஸ். அகமட் லெவ்வை, திருமதி. கே.தவப்பிரகாசம், எம்.பகிதரன், எம்.எஸ்.எம்.நசீர், கே.தங்கராசா, ஈ.சீதாராமன், எம்.எம்.அகமட் சின்னலெவ்வை, என்.நவதாசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு புதிய தலைவரின் உரை மற்றும் ஏனைய உறுப்பினர்களின் கருத்துக்கள் என்பன இடம் பெற்றதனைத் தொடர்ந்து செயலாளரின் நன்றியுரையுடன் அனைத்து நிகழ்வுகளும் நிறைவு பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கல்முனை சாஹிராவில் புனர் நிர்மாணப் பணிகள்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையில் கல்வி பயின்ற பழைய மாணவர்களான எம்.எம்.எம். அம்ஸத், ஏ.எச். பௌசுல் அமீன், ஏ.சீ.ஏ. மஸாஹிர், ஏ.ஆர்.எம். நீசா ஆகியோரின் முயற்சியினால் நவீன வசதிகளுடன் கூடிய 40 மலசலகூடங்கள் புனர் நிர்மாணம் செய்யப்பட்டும் மேலும் 04 மலசலகூடங்கள் புதிதாக அமைக்கப்பட்டும் மொத்தமாக 44 மலசலகூடங்களைக் கையளிக்கும் நிகழ்வு பாடசாலையில் நடைபெற்றது.

கல்லூரியின் அதிபர் எம். ஐ. ஜாபிர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இவ்வேலைத்திட்டத்தை துரித கதியில் மேற்கொண்டு அதனை திறம்பட முடித்த மேற்குறிப்பிட்ட இப் பாடசாலையின் பழைய மாணவர்களும் கலந்து கொண்டு உத்தியோகபூர்வமாக மாணவர்கள் மற்றும் அதிபர், ஆசிரியர் குழாத்தினரின் பாவனைக்கு உதவும் வகையில் கையளித்தனர்.

சுமார் ஒரு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட செலவில் சகல வசதிகளுடன் கூடிய நவீன முறையில் மலசல கூடங்கள் புனரமைக்கப்பட்டு மேலும் 04 புதிதாக அமைக்கப்பட்டும் கையளிக்கப்பட்டன. இதன்போது இப்பழைய மாணவர்கள் அதிபர் குழாத்தினரால் நினைவுச் சின்னம் வழங்கி, பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

## பாவனைக்கு உதவாத குகுல்கட்டுவ குளம் அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

( எம்.ரீ.ஆரிப் )

மஹாவிலச்சிய பிரதேச செயலகப் பகுதிக்குட்பட்ட குகுல்கட்டுவ கிராமத்திலுள்ள குளம் பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படுகிறது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குளத்தை சீரமைத்து கிராம மக்களின் தேவையை பூர்த்தி செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

விவசாயத்தையே பிரதான வாழ்வாதாரமாக கொண்ட கிராம மக்கள் அன்றாடம் விவசாயம் செய்து விட்டு குளிப்பதற்கு இந்த குளத்தை பயன்படுத்துவதாகவும் ஆனால் அசுத்தமான தண்ணீரில் குளித்த மக்கள் மற்றும் குழந்தைகள் பல்வேறு நோய்களுக்கு ஆளாகி வருவதாகவும் கிராம மக்கள் தெரிவித்தனர்.

மேலும் பல ஆண்டு கால வரலாற்றுப் பாரம்பரியமிக்க இந்த குளம் கடந்த காலத்தை நினைவுபடுத்தும் வகையில் கிராமத்திற்கு மிகுந்த அழகையும் தற்போதைய சூழலையும் தந்தாக கிராம மக்கள் தெரிவித்தனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்களுக்கு 110 ஏக்கர் நெற் செய்கைக்கான நீர் ஆதாரமாகவுள்ள இந்த குகுல்கட்டுவ குளம் தற்போது சல்பினியா, ஜப்பான் ஜபரா, வண்டல் மண் மற்றும் நீர் வாழைத்தாவரம் என்பன நிரம்பியுள்ளன.

# தமிழரசுக் கட்சியை அரசியல் மாபியாக்களின் கூடாரமாக்க வேண்டாம்!



மத்திய குழு உறுப்பினர் சி. சிவமோகன்


(கி. வசந்தரூபன்)

தில் இருந்தால் வழக்கை மீளப்பெற்று தமிழரசுக் கட்சியின் பொதுக் குழுவை கூட்டுங்கள். மத்திய குழுவை அரசியல் மாபியாக்களின் கூடாரமாக்கக் கூடாது எனவும் பொதுக் குழுவில் தேசிய பட்டியல் ஆசனம் பற்றி பேசப்பட்டு அது மாற்றப்பட வேண்டும் எனவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினருமான சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் (10.01) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

கட்சியின் யாப்பே அதன் முதுகெலும்பு. அதன் கொள்கைகள் அது பயணிக்கும் வழித்தடம். அந்த அடிப்படையில் ஒரு கட்சியை நிர்மூலமாக்குவதற்கு யாப்பை மீறி செயற்பட்டால் அதனை முடக்கலாம். இன்று எமக்கான சந்தேகம் இதுவே.

திருகோணமலையில் கட்சி மீது தொடரப்பட்ட வழக்கின் மூலம் எமது பொதுச் சபையானது முடக்கப்பட்டுள்ளது. அப்போது இனிமேல் யாப்பு மீறல் செய்ய மாட்டோம் என்று பேசப்பட்டது. ஆனால் மீண்டும் அதே யாப்பு மீறலை மத்தியகுழு செய்கிறது என்றால் இதன் நோக்கம் என்ன? பொதுக்குழுவிற்கு எதிராக நீதிமன்ற வழக்குகளை நடத்தியவர்கள் யார் என்பது கண்டுபிடிக்கப்பட வேண்டிய விடயம். தலைவரை மாற்ற சம்மதித்தால் வழக்கை மீளப் பெறுவதாக ஒருவர் சொன்னார். முதலில் அதை கண்டு பிடியுங்கள். பொதுக்குழுவை இயங்கச் செய்யுங்கள். மத்திய குழுவை அரசியல் மாபியாக்களின் கூடாரமாக மாற்றக் கூடாது.

கடந்த ஒரு மத்திய குழு கூட்டத்தில் மாவை சேனாதிராஜாவை கதிரையில் இருக்க வேண்டாம், உங்கள் இராஜினாமா ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்று சொன்ன நபர் மத்திய குழுவிலேயே இல்லாத ஒருவர். மத்திய குழுவில் இல்லாத ஒருவர் உள்ளே எடுக்கப்பட்டு அவரால் சேறு பூசப்படுகிறது. தலைவர் நிகழ்ச்சி நிரலை தன்னிடம் காட்டிவிட்டு அறிவிக்குமாறு கடிதம் அனுப்பினார். ஆனால் அதற்கு முந்திய திகதி போட்டு பதில் செயலாளர் நிகழ்ச்சி நிரலை அனுப்பியுள்ளார். நிலைமை அவ்வாறே உள்ளது.

பதில் செயலாளர் என்ற போர்வையில் ஒருவர் இருந்து கொண்டு யாப்பை மீறி செயற்பட்டமையாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இவர்களுக்கு தில் இருந்தால் அந்த வழக்கை மீளப் பெற்று பொதுச்சபை கூடுவதற்கு இடம் தரவேண்டும். எம்மிடம் 300 இற்கும் மேற்பட்ட பொதுச் சபை உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அதை செய்தாலே மாபியாக்களிடமிருந்து தமிழரசு கட்சியை மீட்கமுடியும்.

பொதுத் தேர்தலில் முதல் முறை போட்டியிட்ட ஒருவர் சொன்னார் நான் தோற்றால் அரசியலுக்கு வரமாட்டேன் என்று. ஆனால் இரண்டாம் தரமும் தோற்றுவிட்டு தேசிய பட்டியலை பெறும் ஆசையில் இருக்க கூடாது அல்லவா! தேசிய பட்டியல் என்பது சமுதாயத்தில் கௌரவமான ஒருவருக்கு வழங்கப்பட வேண்டும். ஏறி மிதித்தாலும் தலையை தூக்கத் தெரியாத மண்புழுக்கள், காணி பிடிக்கின்ற மாபியாக்கள், ஜனநாயக மறுப்பை செய்யும் சுயநலவாதிகள் இவர்களே தேசிய பட்டியலில் வந்தவர்கள். இதனால் கட்சியை வளர்க்க முடியுமா?

கட்சியின் பொதுக்குழு கூடும் போது தேசிய பட்டியலை நாங்கள் மீள் பரிசீலனை செய்வோம். கட்சியை மீட்பதற்காக மாத்திரமே நான் போராடுகிறேன். நான் வெளிநடப்பு செய்யும் வரை 4 மணித்தியாலம் கூட்டத்தில் இருந்தேன். அப்போது எனக்கு எதிரான குற்றச் சாட்டுக்களை சொல்ல திராணியற்றவர்கள். நான் போன பின் எனக்கு எதிரான குற்றங்களை கொண்டு வந்து நிறைவேற்றுகிறார்கள். மத்திய குழுவில் இருந்து என்னை நீக்கியதாக கூறினார்கள். மத்திய குழு உறுப்பினரை நீக்கும் அதிகாரம் மத்திய குழுவிற்கு இல்லை என்று கட்சியினுடைய யாப்பின் விதி 07 கூறுகிறது. அந்த அதிகாரம் பொதுச் சபைக்கே இருக்கிறது. கடந்த கூட்டத்தை விட்டு நான் வெளியேறிய பின்னர் என் மீது குற்றத்தை முன்வைத்து என்னை இடைநிறுத்தியதாக

> தேசிய பட்டியல் என்பது சமுதாயத்தில் கௌரவமான ஒருவருக்கு வழங்கப்பட வேண்டும்

அவர்கள் பிரசாரம் செய்தார்கள். பொதுச்சபையை கூட விடுங்கள்.

எனவே, என்னை நீக்கியமை தொடர்பான உண்மைத் தன்மையினை உறுதிப்படுத்தி 72 மணித்தியாலங்களில் பதில் அளிக்குமாறு கோரி பதில் செயலாளருக்கு நான் கடிதம் அனுப்பியிருந்தேன். அதன் பிரதிகள் தலைவர் மாவை சேனாதிராஜா, பதில் தலைவர் சிவஞானம், தெரிவு செய்யப்பட்ட தலைவர் சிறிதரன் ஆகியோருக்கும் அனுப்பியிருக்கிறேன். வெறுமனே வாய் சவால்களால் கட்சியின் பதவிகளை பறிக்க முடியாது. அதற்கென்று ஒழுங்கு முறை உள்ளது.

தமிழரசுக் கட்சி ஒரு சமஸ்டிக் கட்சி. சிலர் அதனை புதிய கண்டுபிடிப்புக்கள் போல கூறி சமரசம் பேசி உருக்குலைக்க முயல்கிறார்கள். என்னைப் பொறுத்த வரை அது நடைபெறாது. இது எங்களுக்கு கிடைக்காமல் இருந்தால் கூட இதனை நாம் எமது சந்ததிக்கு கடத்த வேண்டிய பொறுப்பு இருக்கிறது. அதனை நம்பித்தான் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகள், ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட பொது மக்கள் மரணித்தார்கள். யுத்த காலத்தில் எனது பிள்ளைகளுடன் கிபிர் குண்டு வீச்சு,குண்டுத் தாக்குதல்களுக்கு மத்தியில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையை 5 வருடம் நிர்வகித்தேன். மருந்துத் தட்டுபாடு, குருதித் தட்டுபாடு, கட்டடங்கள் இல்லை, கட்டில்கள் இல்லை. ஆனால் சுகாதார ஆளணியுடன் இணைந்து பணியாற்றினோம். நாம் வலி கண்டவர்கள்.

நீங்கள் எங்கு இருந்தீர்கள்..? யுத்தம் மௌனித்த போது சிலர் குறிப்பாக மாவை சேனாதிராஜா பற்றி பேசுபவர் எங்கிருந்து வந்தார். மக்கள் மரணித்து கொண்டிருந்த போது பால் சோறு உண்டவர்கள். அவர்களுடன் இணைந்து சமரசம் உலாவியவர்கள். இன்று அவர்கள் இந்த மண்ணில் தங்களது நிலைப்பாட்டை நிலைநிறுத்த ஒரு போதும் விடமாட்டோம். எங்களுக்கு கட்சி, பதவி தேவையில்லை. எந்த நோக்கத்திற்காக வன்னி மண்ணில் நின்றோமோ அதனை உருக்குலைக்க விடப்போவதில்லை.

ஒரு விடயத்தை தீர்மானித்தால் கட்சி நிர்வாகிகளுக்கு அந்த கடிதத்தை அனுப்புவதற்கு திராணி இருக்க வேண்டும். மாவை சேனாதிராஜா இராஜினாமா செய்வதாக இவர்களுக்கு சொல்லவே இல்லை. தங்களது தேசியப் பட்டியல் நாடாளுமன்றத்தை வேண்டிய பின் தான் மாவை சேனாதிராஜாக்கு கடிதம் அனுப்பியுள்ளனர். தேசியப் பட்டியல் ஆசனம் குழம்பி விடக் கூடாது என்பதற்காக அதுவரை பொறுத்திருந்து அவரைக் கூட்டிக் கொண்டு தலைவராக மேசையில் இருந்தி தங்களது தேவையை நிறைவேற்றினார்கள்.

அதற்கு முதலே அவர் பதவி விலகி விட்டதாக சொல்லியிருந்தார்கள். ஆனால் இராஜினாமா செய்யவில்லை என மாவை சேனாதிராஜா கடிதம் எழுதியுள்ளார். மாவை சேனாதிராஜா முன்னர் எழுதிய கடிதம் சிவஞானம் சிறிதரன் அவர்களுக்கு எழுதப்பட்டது. அதில் நான் இராஜினாமா செய்ய எண்ணியுள்ளேன். அந்த பொறுப்பை ஏற்க முன்வாருங்கள் என்று தான் குறிப்பிட்டு இருந்தார். அதன் அர்த்தம் என்ன? நீங்கள் வந்தால் நான் உங்களிடம் தந்து விட்டு விலகி விடுவேன் என்பது தானே!

மாவை சேனாதிராஜா ஒரு போராளி. அவரை பதவியாக பார்க்க முடியாது. ஆரம்ப காலத்தில் இருந்து அடிபட்டு சிறைச்சாலை சென்று வந்த ஒரு தலைவன். அவரை அசிங்கப்படுத்தி வெளியில் அனுப்ப முடியுமா? என்னை நீக்குவதாக சொன்னார்கள். அந்தக் கடிதமும் இன்னும் கிடைக்கவில்லை. கடிதம் எனக்கு கிடைத்தால், பதில் செயலாளருக்கு எம்மை நீக்கும் அதிகாரம் இல்லை என்று கூறி உடனடியாக அவர் பதவி விலக வேண்டும் என வழக்கு தாக்கல் செய்வேன். இவர் நியமனம் செய்யப்பட்ட பதில் செயலாளர், 4 வருடங்களாக பொதுச் சபையால் அங்கீகரிகப்படவில்லை. மாவை சேனாதிராஜா பொதுச் சபையை கூட்டுமாறு பல தடவை கூறியும் அதை அவர்கள் செய்யவில்லை. அவர்கள் தாம் நினைத்ததை செய்ய முயல்கிறார்கள். அடுத்து எமது இனத்தை எங்கு கொண்டு சென்று விற்க முடியும் என தேடுகிறார்கள். அவர்களது திட்டத்திற்கு இணங்க முடியாது எனத் தெரிவித்தார்.

# ஆறு நாட்களாக நீடிக்கும் காட்டுத்தீ

## லொஸ் ஏஞ்சல்ஸில் 24 பேர் பலி

லொஸ் ஏஞ்சல்ஸில் தொடர்ந்தும் ஆறாவது நாளாக ஞாயிற்றுக்கிழமை எரிந்த இரண்டு காட்டுத் தீயின் எல்லைகளை அணைக்க தீயணைப்பு வீரர்கள் போராடி வருகின்றனர், அதிக காற்று மீண்டும் தீப்பிழம்புகளை எரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதுடன் ஆகக் குறைந்தது 24 பேர் உயிரிழந்துள்ளனர்.

கலிபோர்னியா ஆளுநர் கவின் நியூசோம், அமெரிக்க வரலாற்றில் மிக மோசமான இயற்கை பேரழிவாக இருக்கலாம் என தெரிவித்தார். இத் தீப்பரவல் ஆயிரக்கணக்கான வீடுகளை அழித்ததுடன் 100,000 மக்களை வெளியேற்ற கட்டாயப்படுத்தியது. 12,300 கட்டமைப்புகள் அழிக்கப்பட்டுள்ளன என அதிகாரிகள் தெரிவித்தனர்.

லொஸ் ஏஞ்சல்ஸ் கவுண்டி மேற்பார்வையாளர் லிண்ட்சே ஹார்வத், “எல்.ஏ. கவுண்டியில் இத் தீப்பரவல் கற்பனை செய்ய முடியாத பயங்கரம் மற்றும் மனவேதனையின் இரவாக இருந்தது” என தெரிவித்தார். பணக்காரர்கள், ஹொலிவூட் பிரபலங்கள் மற்றும் சாதாரண மக்களின் வீடுகளை அழித்ததுடன் அவர்கள் சொந்த நிலப்பரப்பை விட்டுச் செல்ல அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டு வெளியேற்றப்பட்டனர்.

நகரத்தின் மேற்குப் பகுதியில் ஏற்பட்ட தீ 23,713 ஏக்கர் (96 சதுர கிமீ) அல்லது 37 சதுர மைல்களை எரித்துள்ளதுடன் 11% தீப்பரவல் தீயணைப்பு வீரர்களால் கட்டுப்படுத்தப்பட்டது, லொஸ் ஏஞ்சல்ஸின் கிழக்கே அடிவாரத்தில் உள்ள ஈட்டனில் ஏற்பட்ட மற்றொரு தீப்பரவல் 14,117 ஏக்கர் (57 சதுர கிமீ) தீயணைப்பு வீரர்களால் 27% ஆக கட்டுப்படுத்தப்பட்டது. இது ஒரு நாளைக்கு முன்பு 15% ஆக இருந்தது. நகரின் வடக்கே, ஹர்ஸ்ட் ஃபயரில் 89% தீப்பரவல் கட்டுப்படுத்தப்பட்டது, மேலும் மாவட்டத்தின் பிற பகுதிகளை நாசம் செய்த ஏனைய மூன்று தீப்பரவல் இப்போது 100% கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என கலிபோர்னியா வனவியல் மற்றும் தீ பாதுகாப்புத் துறை (கால் ஃபயர்) தெரிவித்துள்ளது.










# போர் நிறுத்த ஒப்பந்தம்; பேச்சுவார்த்தைக்காக இஸ்ரேலிய உயர்மட்ட குழு டோஹா பயணம்



காஸா பணயக்கைதிகள் மற்றும் போர்நிறுத்த ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைக்காக உயர்மட்ட இஸ்ரேலிய பாதுகாப்புக் குழு ஞாயிற்றுக்கிழமை கட்டார் சென்றடைந்ததாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

கட்டார் மற்றும் சக மத்தியஸ்தர்களான எகிப்து மற்றும் அமெரிக்கா ஆகியவை ஜனவரி 20 ஆம் திகதி ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்பதற்கு முன், என்கிளேவில் சண்டையை நிறுத்தவும், மீதமுள்ள 98 பணயக்கைதிகளை விடுவிக்கவும் ஒரு ஒப்பந்தத்தை எட்டுவதற்கு புதுப்பிக்கப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இந்த தூதுக்குழுவில் மொசாட் தலைவர் டேவிட் பார்னியா, ஷின் பெட் உள்நாட்டு பாதுகாப்பு சேவையின் தலைவர் ரோனென் பார் மற்றும் பணயக்கைதிகளின் இராணுவத் தலைவர் நிட்சன் அலோன் ஆகியோர் அடங்குவர் என்று நெதன்யாகுவின் அலுவலகம் சனிக்கிழமை தெரிவித்தது.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன அதிகாரிகள் வியாழன் முதல் இஸ்ரேலுக்கும் ஹமாஸ் போராளிக் குழுவிற்கும் இடையிலான மறைமுகப் பேச்சுவார்த்தையில் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர் ஆனால் அது பற்றி விரிவாக எதுவும் தெரிவிக்கவில்லை அத்துடன் முந்தைய சுற்றுப் பேச்சுக்களில் நீடித்து வந்த மிகப் பெரிய இடைவெளிகளை அவர்கள் எவ்வாறு சரிசெய்வார்கள் என்பதும் தெளிவாகத் தெரியவில்லை. ஹமாஸ் போரை நிறுத்தக் கோருகிறது, அதே நேரத்தில் ஹமாஸ் காஸாவை ஆட்சி செய்து இஸ்ரேலியர்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் வரை போரை நிறுத்தாது என இஸ்ரேல் கூறுகிறது.

2023 ஒக்டோபரில் ஹமாஸ் போராளிகள் அதன் எல்லைகளைத் தாண்டி 1,200 பேரைக் கொன்று 250 இற்கும் மேற்பட்ட பணயக் கைதிகளைப் பிடித்ததை அடுத்து, இஸ்ரேல் காஸாவில் தனது தாக்குதலைத் ஆரம்பித்தது. அப்போதிருந்து, பலஸ்தீனிய சுகாதார அதிகாரிகளின் கூற்றுப்படி, காஸாவில் 46,000 இற்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர், பெரும்பாலான பகுதிகள் வீணடிக்கப்பட்டன மற்றும் மனிதாபிமான நெருக்கடியால் மக்கள் இடம்பெயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜூனியர் கிரிக்கெட்டில் முச்சதம்



இந்திய கிரிக்கெட் சபை நடத்தும் பெண்களுக்கான 19 வயதுக்குட்பட்டோரின் ஒரு நாள் கிரிக்கெட் போட்டி பெங்களூர் அருகே உள்ள ஆலூரில் நடந்து வருகிறது.

இதில் மேகாலயாவுக்கு எதிரான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணி 50 ஓவர்களில் 3 விக்கெட்டுக்கு 563 ஓட்டங்கள் குவித்து மலைக்க வைத்தது. தொடக்க ஆட்டக்காரராக இறங்கிய 14 வயதான இரா ஜாதவ் 346 ஓட்டங்கள் (157 பந்து, 42 பவுண்டரி, 16 சிக்சர்) விளாசி பிரமிக்க வைத்தார்.

இந்த வகை போட்டியில் முச்சதம் அடித்த முதல் இந்தியர் என்ற சாதனையை படைத்தார். இருப்பினும் பெண்கள் ஜூனியர் கிரிக்கெட்டில் 2010-ம் ஆண்டு நடந்த ஒரு ஆட்டத்தில் தென்னாபிரிக்காவின் லிசெல் லீ 427 ஓட்டங்கள் எடுத்ததே உலக சாதனையாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

வெற்றியை நோக்கி ஆடிய மேகாலயா வெறும் 19 ஓட்டங்களில் சகல விக்கட்டுளையும் இழந்தது. இதனால் மும்பை அணி 544 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.



# இலங்கை வந்துள்ள ரொனால்டோ

முன்னாள் உதைப்பந்தாட்ட உலக சாம்பியனான "ரொனால்டோ நசாரியோ" தற்போது தனது குடும்ப உறுப்பினர்களுடன் இலங்கையின் பல பகுதிகளுக்கு சுற்றுப்பயணம் செய்து வருகிறார்.

உதைப்பந்தாட்ட வரலாற்றில் ஒரு சிறந்த ஜாம்பவானான பிரேசில் உதைப்பந்தாட்ட வீரர் ரொனால்டோ நசாரியோ, 2002ஆம் ஆண்டு பிரேசிலுக்கு உலகக் கிண்ணத்தை பெற்றுக் கொடுக்க சிறந்த பங்களிப்பை வழங்கியதற்காக, அந்த ஆண்டின் சிறந்த வீரருக்கு வழங்கப்படும் தங்க காலணி விருதையும் பெற்றுக் கொண்டார்.

தனது பயணத்திற்காக இலங்கையைத் தேர்ந்தெடுப்பதன் மூலம், நாட்டின் தற்போதைய சுற்றுலாத் தலங்களையும், விருந்தோம்பல் சேவைகளின் புதிய போக்குகளையும் உலகிற்கு எடுத்துச் கூறுவதற்கும், சுற்றுலாப் பயணிகள் தங்கள் பயணத்திற்கு இலங்கையைத் தேர்ந்தெடுக்க ஊக்குவிப்பதற்கும் அவர் ஒரு சிறந்த உத்வேகத்தை வழங்குகிறார்.

# 2025 ஐபிஎல் தொடர் திகதி அறிவிப்பு

18ஆவது ஐபிஎல் தொடர் மார்ச் 21 முதல் ஆரம்பிக்கப்படும் என பிசிசிஐ துணைத் தலைவர் ராஜீவ் சுக்லா தெரிவித்துள்ளார்.

இந்த சீசனில் மொத்தம் 74 போட்டிகள் இடம் பெறும் எனவும் அவர் கூறியுள்ளார்.

2025 ஐபிஎல் இறுதிப் போட்டி மே 25 அன்று நடைபெறும் எனவும் ராஜீவ் சுக்லா கூறி இருக்கிறார். சுமார் இரண்டு மாதங்கள் இந்திய கிரிக்கெட் மைதானங்கள் ஐபிஎல் தொடர் நடைபெற உள்ளது.

முன்னதாக மார்ச் 23 முதல் 2025 ஐபிஎல் தொடர் ஆரம்பிக்கப்படும் என கூறப்பட்டிருந்தது. ஆனால், தற்போது அதில் சிறிய மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பல்வேறு விடயங்கள் தொடர்பில் விவாதிக்க பிசிசிஐ கூட்டம் நடத்தப்பட்டது. அப்போது புதிய பிசிசிஐ செயலாளராக தேவஜித் சைக்கியா நியமிக்கப்பட்டார். அத்துடன் சமீபத்தில் நடந்து முடிந்த அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடர் குறித்து விவாதிக்கப்பட்டது.

2025 ஐபிஎல் தொடரில் பத்து அணிகள் பங்கேற்க உள்ளன. எப்போதும் ஐபிஎல் தொடரில் முந்தைய போட்டியை வென்ற அணியின் சொந்த மைதானத்தில் இறுதிப் போட்டி நடத்தப்படும். அதன்படி 2025 ஐபிஎல் தொடரின் இறுதிப் போட்டி கொல்கத்தாவில் நடைபெற அதிக வாய்ப்பு உள்ளது.

2024 ஐபிஎல் தொடரை கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி வென்றமை குறிப்பிடத்தக்கது.





# கபில்தேவை சுட்டுக் கொல்ல முயற்சித்த யோக்ராஜ் சிங்

"இந்திய அணிக்கு என்னை தேர்வு செய்யாததால், கபில்தேவை சுட்டுக் கொல்ல திட்டமிட்டேன்" என யுவராஜ் சிங்கின் தந்தை யோக்ராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் முன்னாள் வீரர் யோக்ராஜ் சிங். ஒரு டெஸ்ட் மற்றும் 6 ஒருநாள் போட்டிகளில் விளையாடினார்.

உள்ளூர் போட்டிகளில் ஹரியானா, பஞ்சாப் அணிகளுக்காக பங்கேற்றார். கபில்தேவ் இந்திய அணியின் கப்டன் ஆன பின், யோக்ராஜ் சிங்கிற்கு இந்திய அணியில் இடம் கிடைக்கவில்லை. இதனால் ஆத்திரமடைந்த யோக்ராஜ், 1983இல் இந்தியாவுக்கு உலகக் கிண்ணம் பெற்று தந்த கபிலை சுட்டு கொல்ல திட்டமிட்டாராம்.

இதுகுறித்து யோக்ராஜ் தெரிவிக்கையில்,

இந்தியா, வடக்கு மண்டலம், ஹரியானா அணிகளுக்கு கப்டனாக பொறுப்பேற்ற கபில்தேவ், எவ்வித காரணமின்றி என்னை அணியில் இருந்து நீக்கினார். எனது மனைவி சப்னம் கவுர், இதுகுறித்து கபில்தேவிடம் கேளுங்கள் என்றார். எனது துப்பாக்கியுடன் கபில்தேவ் வீட்டிற்கு சென்றேன். அவர், தனது தாயாருடன் வெளியே வந்தார். அப்போது அவரை திட்டினேன். பின் அவரிடம் "எனது துப்பாக்கியால் உனது தலையில் சுடுவதற்கு இங்கு வந்தேன். இதை செய்யமாட்டேன். ஏனெனில் உங்களுக்கு மிகவும் பக்தியுள்ள அம்மா இருக்கிறார்கள்" என்று கூறிவிட்டு எனது மனைவியுடன் வீடு திரும்பினேன். அத்தருணத்தில் தான் இனி கிரிக்கெட் விளையாடக் கூடாது என முடிவு செய்தேன். எனது மகன் யுவராஜ் சிங்கை களமிறக்க தீர்மானித்தேன்.

கடந்த 2011ல் இந்திய அணி உலக கிண்ணம் வென்ற போது இந்தியாவில் ஒருவர் மட்டும் அழுதிருப்பார். அவர் தான் கபில்தேவ். உங்களை விட எனது மகன் சிறப்பாக விளையாடினார் என்று கபிலுக்கு செய்தி அனுப்பினேன். அதற்கு கபில்தேவ், மன்னிப்பு கேட்டிருந்தார்.

அணித்தேர்வில் முன்னாள் சுழற்பந்துவீச்சாளர் பிஷன் சிங் பேடியும் எனக்கு துரோகம் செய்துவிட்டார். தேர்வுக்குழுவில் இருந்த இவர், நான் கவாஸ்கரின் ஆதரவாளர் என கருதி, அணியில் இடம் கொடுக்க வில்லை என்றார்.

# இந்திய கிரிக்கெட் சபைக்கு புதிய செயலாளர் – பொருளாளர்



இந்திய கிரிக்கெட் சபையின் புதிய செயலாளராக தேவஜித் சைகியாவும், பொருளாளராக பிரப்தேஜ் சிங் பாட்டியாவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இதனை இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் ரோஜர் பின்னி அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் சபையின் (பி.சி.சி.ஐ.) செயலாளராக இருந்த ஜெய்ஷா சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐ.சி.சி.) புதிய தலைவராக கடந்த டிசம்பர் மாதம் பொறுப்பேற்றார். இதனால் இந்திய கிரிக்கெட் சபைக்கு புதிய செயலாளரை நியமிக்க வேண்டியிருந்தது. கிரிக்கெட் வாரிய விதிப்படி இந்த பதவியை 45 நாட்களுக்குள் நிரப்ப வேண்டும்.

இதனிடையே இந்திய கிரிக்கெட் சபையின் இடைக்கால செயலாளராக தேவஜித் சைகியா நியமிக்கப்பட்டார். சைகியா இதற்கு முன்னர் இணை செயலாளர் பதவியில் இருந்தார்.

இதனையடுத்து நிரந்தர செயலாளரை தேர்ந்தெடுக்கும் பணியில் பி.சி.சி.ஐ. நிர்வாகக்குழு இறங்கியது. மேலும் பொருளாளர் பதவியும் நிரப்ப வேண்டி இருந்தது.

இந்த பதவிகளுக்கு தலா ஒருவர் மட்டுமே வேட்பு மனு தாக்கல் செய்திருந்ததால் அவர்கள் போட்டியின்றி தேர்வானார்கள்.

அமெரிக்க,கலிபோர்னிய காட்டுத் தீயில், அமெரிக்காவைச் சேர்ந்த நீச்சல் வீரர் ஒருவரின் 10 ஒலிம்பிக் பதக்கங்கள் அழிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் கட்டுக்கடங்காமல் பரவி வரும் காட்டுத் தீ, பல ஆயிரம் வீடுகளை தீக்கிரையாக்கியது. இந்த தீ விபத்தில் பல கோடி ரூபாய் பெறுமதியான உடைமைகளை ஏராளமானோர் இழந்துள்ளனர்.

அந்தவகையில் அமெரிக்காவைச் சேர்ந்த முன்னாள் நீச்சல் வீரர், கேரி ஹால் ஜூனியர் 10 ஒலிம்பிக் பதக்கங்களை காட்டுத் தீயில் பறிகொடுத்துள்ளதாக கவலை தெரிவித்துள்ளார்.




# காட்டுத் தீயில் கருகிய 10 ஒலிம்பிக் பதக்கங்கள்



# பங்களாதேஷில் ஷகிப் அல் – ஹசன் – லிட்டன் தாஸ் சேர்க்கப்படவில்லை



சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான பங்களாதேஷ் அணியில் ஷகிப் அல்-ஹசன் மற்றும் லிட்டன் தாஸ் ஆகியோர் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

சம்பியன்ஸ் கிண்ணத்துக்கான பங்களாதேஷ் அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

சகலதுறை ஆட்டக்காரரான ஷகிப் அல்-ஹசன் கவுண்டி கிரிக்கெட்டில் விளையாடிய போது அவரது பந்துவீச்சு விதிமுறைக்குட்பட்டு இல்லை என கூறி ஐ.சி.சி. தடைவிதித்தது. இதைத் தொடர்ந்து இங்கிலாந்து மற்றும் சென்னையில் நடந்த பந்து வீச்சு சோதனையிலும் அவர் தேறவில்லை. இதனால் அவரது பந்துவீச்சுக்கு தடை தொடருகிறது. இதன் காரணமாகவே ஷகிப் அல்-ஹசன் ஓரங்கட்டப்பட்டுள்ளார்.

அத்தோடு சாம்பியன்ஸ் கோப்பை போட்டியுடன் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து முழுமையாக விடைபெற இருந்த அவரது கனவு கலைந்தது. உடல் தகுதியற்று தடுமாறும் விக்கெட் கீப்பர் லிட்டன் தாசும் இணைத்துக் கொள்ளப்படவில்லை.

**பங்களாதேஷ் அணி:-**

நஜ்முல் ஹூசைன் ஷன்டோ (கெப்டன்), முஷ்பிகுர் ரஹீம், தவ்ஹித் ஹிரிடாய், சவுமியா சர்கார், தன்சித் ஹசன், மக்முதுல்லா, ஜாக்கர் அலி, மெஹிதி ஹசன் மிராஸ், ரிஷாத் ஹூசைன், தஸ்கின் அகமது, முஸ்தாபிஜூர் ரகுமான், பர்வேஸ் ஹூசைன், நசும் அகமது, தன்சிம் ஹசன், நஹித் ராணா.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினால் 2025 ஜனவரி 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.